யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 13 வள்ளுவர் ஆண்டு 2029 ஆவணி 30 செவ்வாய்க்கிழமை (15-09-1998) UTHAYAN A Lively National Tamil Daily சுடர்: 249

# யாழ். மேயரின் பூதவுடல் நேற்று தீயுடன் சங்கமம்

## நகரில் ஹர்த்தால் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், செப். 15

யாழ். மாநகர சபையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்பில் பலியான யாழ். மேயர் பொன். சிவபாலனின் பூதவுடல் பலரின் கண்ணீருக்கு மத்தியில் நேற்றுப் பிற்பகல் கோம்பயன்மணல் மயானத்தில் தீயுடன் சங்கமமானது.

பூதவுடலுக்கு அவரது சகோதரர்கள் தீ மூட்டினார்கள்.

மேயரின் பூதவுடல் அவரது சொந்த இடமான சித்தன் கேணியிலுள்ள அவரது வீட்டிற்கு கடந்த சனிக்கிழமை எடுத்துச் செல்லப்பட்டது. ஞாயிறு முழுநாளும் உறவினர்கள் அஞ்சலிக்காக அங்கு வைக்கப்பட்டிருந்த பூதவுடல் நேற்றுக் காலை 10 மணியளவில் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள — தமிழர் விடுதலைக் கூட்டணிக் காரியாலயமான — மேயரின் வாசஸ்தலத்துக்கு எடுத்து வரப்பட்டு அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், வர்த்தகர்கள், யாழ். மாநகர சபை ஊழியர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையான மக்கள் உதயசூரியன் கொடியால் போர்த்தப்பட்ட மேயரின் பூதவுடலுக்கு தமது இறுதி அஞ்சலியைத் தெரிவித்தனர். பலர் மலர் வளையம் சாத்தியும், அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டும் தமது இரங்கலைத்

(10 ஆம் பக்கம் பார்க்க)



காலஞ்சென்ற யாழ். மேயர் பொன். சிவபாலனின் பூதவுடல் நேற்று ஸ்ரான்லி வீதியில் உள்ள கூட்டணி அலுவலகத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த போது எடுக்கப்பட்ட படம்.

(படம்: மணிவண்ணன்)

## குண்டு வெடித்த இடத்தில் பகுப்பாய்வாளர்கள் தொடர்ந்து ஆய்வு!

யாழ். மாநகரசபை அலுவலகக் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்காக அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்கள அதிகாரிகள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

குண்டு வெடிப்பில் தகர்ந்த அலுவலகக் கட்டடப் பகுதியில் தமது பகுப்பாய்வு நடவடிக்கைகளை அவர்கள் நேற்றே ஆரம்பித்தனர். இன்றும் பகுப்பாய்வுப் பணி தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதன் பின்னர் — அனேகமாக நாளைக்கு — சேதமுற்ற கட்டடப் பகுதியில் இருந்து ஆவணங்களை பாதுகாப்பான இடத்துக்கு அகற்றுவதற்கு அனுமதியளிக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப் படுகிறது. (உ-21)

# புதிய மேயர் தெரிவு கால தாமதமாகும்!

## களநிலைமையை ஆராய்கிறது கூட்டணி

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 15

கொலையுண்ட யாழ். மேயர் பொன். சிவபாலனின் இடத்துக்கு புதிய மேயர் ஒருவரைத் தெரிவு செய்வது சற்றுக் கால தாமதமாகும் எனத் தெரிய வருகின்றது.

தற்போதைய களநிலைமையை கூட்டணி வட்டாரங்கள் உன்னிப்பாக ஆராய்ந்து வருகின்றன.

குறுகிய காலத்தில் — அடுத்தடுத்து — இரண்டு மேயர்களின் உயிருக்கு இலக்கு வைக்கப்பட்டிருப்பது கூட்டணி வட்டாரங்களை பெரும் அதிர்ச்சிக்கும், விசனத்துக்கும் உள்ளாக்கியிருக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வந்தாறுமூலையில் புலிகள் படையினர் மோதல்

### 3 படையினர், 2 புலிகள் பலி!

மட்டக்களப்பு, செப். 15

மட்டக்களப்பு — வாழைச்சேனை வீதியில் வந்தாறுமூலையில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்று இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் இரு தரப்பிலும் ஐந்து பேர் பலியாகியுள்ளனர்.

சித்தாண்டி இராணுவ முகாமில் இருந்து வீதிக் கண்காணிப்புப்பணியில் ஈடுபடவந்தபடையினர் மீதே விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்தியுள்ளனர். இத் தாக்குதலின் போது மூன்று இராணுவத்தினர் பலியாகினர். ஆறு பேர் காயமடைந்தனர்.

விடுதலைப் புலிகள் தரப்பில் இருவர் உயிரிழந்தனர் எனவும் — அவர்களது சடலங்களை இராணுவத்தினர் கைப்பற்றினர் எனவும் —

இச் சம்பவத்தில் பொதுமகன் ஒருவர் காயமடைந்தார் எனவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. [ஐ-21-9]

## வல்லையில் கிளைமோர்

யாழ்ப்பாணம் செப் 15

வல்வெட்டித்துறைப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 3-40 மணியளவில் விடுதலைப் புலிகளின் இரு கிளைமோர் கண்ணிகள் வெடித்ததாகவும் —

அதில் படைச் சிப்பாய் ஒருவரும், சிவிலியன் ஒருவரும் காயமடைந்ததாகவும் — பலாலி இராணுவத் தலைமையகச் செய்திக் குறிப்பு தெரிவித்தது. (ஐ-15-109)

## ஓலுமடுவில் மோதல்

கொழும்பு, செப். 15

மாங்குளத்துக்கு அப்பால் ஒலுமடுவுக்குத் தென்கிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 9-30 மணியளவில் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் நடந்த மோதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்; இரண்டு சிப்பாய்கள் காயமடைந்தனர்.

பாதுகாப்பு அரண்களில் காவலில் இருந்த படையினர் மீது புலிகள் நடத்திய தாக்குதல் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டதாகப் படை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## பலியான பணியாளர்களின் குடும்பத்தவர்களுக்கு ஜனாதிபதியின் செய்தி

யாழ்ப்பாணம், செப். 15

யாழ். மாநகரசபையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் பலியான மாநகரசபை ஊழியர்களின் குடும்பத்தவருக்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அனுதாபச் செய்திகளை அனுப்பி வைத்துள்ளார்.

யாழ். படைத்தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பண்டத்தரிப்பு - கீரிமலை வீதியில் 'ரைம் பொம்'

யாழ்ப்பாணம், செப். 15

பண்டத்தரிப்பு — கீரிமலை வீதியில் நேற்றுக் காலை குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இனந்தெரியாதோரால் வைக்கப்பட்ட நேரங் கணித்து வெடிக்கக்கூடிய குண்டே அங்கு வெடித்தது என்றும் —

அதனால் யாருக்கும் சேதம் ஏற்படவில்லை என்றும் — படை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-15)

## அம்பாறை நீதிமன்றில் குண்டுப் புரளி

மட்டக்களப்பு, செப். 15

அம்பாறை மாவட்ட நீதிமன்றக் கட்டடத்தில் குண்டு வைக்கப்பட்டிருப்பதாகக் கிடைத்த அநாமதேயத் தொலைபேசித் தகவல் காரணமாக நீதிமன்றப் பணிகள் நேற்று செயலிழந்தன.

நேற்றுக்காலை நீதிமன்றப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய 5 வலயங்களுக்கும் பணிப்பாளர்கள் தெரிவு

யாழ்ப்பாணம், செப். 15

எதிர்வரும் முதலாம் திகதி முதல் யாழ். மாவட்டத்தில் கல்வி நிர்வாக அலகு ஐந்து வலயங்களாகப் பிரிக்கப்படவிருக்கின்றது. இந்த ஐந்து வலயங்களுக்கும் பொறுப்பாக ஐந்து கல்விப் பணிப்பாளர்களும் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது.

அவர்களின் விவரம் வருமாறு:

★ வலயம் I [யாழ்ப்பாணம்] — என். சுந்தரலிங்கம்

★ வலயம் II [மருதனார்மடம்] — ஆர். இராசையா

★ வலயம் III [வடமராட்சி] — எஸ். சிவராஜா

★ வலயம் IV [சாவகச்சேரி] — வி. செல்வராஜா

★ வலயம் V (தீவகம்) —

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் வர்த்தகர் காணாமற்போனார்

வவுனியாவில் பிரபல வர்த்தகர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு முதல் காணாமல் போயுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிவசக்தி ரேடர்ஸ், சிவசக்தி பார்மஸி, சிவசக்தி மில் உட்பட பல வியாபார நிலையங்களின் உரிமையாளரான எஸ். சண்முகராஜா என்ற வர்த்தகரே காணாமற் போயுள்ளார்.

தமது மில்லில் இருந்து இரவு வீடு நோக்கிப் புறப்பட்ட அவர் வீடு வந்துசேரவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. பணம் பறிக்கும் நோக்கில் இவர் கடத்திச் செல்லப்பட்டிருக்கலாம் என்று வவுனியாவில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

திருமதி

## பேணாட் மேரிகிரேஸ்

மண்டைதீவு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி பேணாட் மேரிகிறேஸ் 13 – 09 – 98 அன்று இறைவனடி சேர்ந்தார்.

இவர் காலஞ்சென்ற அத்தனாஸ் ஞானசவுந்தரி ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செபஸ்தி வரவணிக்கம் ஆகியோரின் மருமகளும், திரு. செபஸ்தி பேணாட்டின் அன்பு மனைவியும், மோகன் (கனடா), வசந்தி (கனடா), சுகந்தி (திருச்சபை கன்னியர் மடம்), ஆனந்தி (ஆசிரியர், மல்லாவி), சாந்தி (2ஆம் வருடம், யாழ். பல்கலைக்கழகம்), ஜானகி, அகிலன், கமல்ராஜ் (புனித மார்டினார் குருமடம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஆனந்தி (கனடா), இம்மானுவேல் (கனடா), ராஜசேகர், நிஷாந்தினி ஆகியோரின் அன்பு மாமியும், நிவேதா, சுவீதா, நிலாந்தன், நிலாந்தி, தக்ஷிகா, நிலுஷிகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

இவரது அடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

26/3, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
பிள்ளைகள்
(59210)

## நாகநாதர் கந்தையா
[வாசையா]

(இளைப்பாறிய தபால் தந்திப் பகுதி ஊழியர்)

கொட்டடியைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட நாகநாதர் கந்தையா 13. 09. 1998 அன்று இரவு 7 மணியளவில் இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் நாகநாதர் தம்பதிகளின் அன்பு மகனும் இன்னதிதம்பி தம்பதிகளின்மருமகனும் காலஞ்சென்ற கமலத்தின் அன்புக்கணவரும் சற்குணபாலதேவி பரமேஸ்வரி (குடும்பநல உத்தியோகஸ்தர் சு. வை. அபணிமனை கோப்பாய்), அருந்தவராஜா (கோபி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற தணிகாசலம் (விற்பனைத்திணைக்களம்), வைத்திலிங்கம் (வர்த்தகர்) ஆகியோரின் மாமனாரும், மயூரனின் (ஆண்டு 11 கொக்குவில் இந்துக் கல்லூரி) பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.09 98 இன்றுசெவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
க. அருந்தவராஜா
[கோபி]
(மகன்)

புதுறோட்,
ஆறுகால் மடம்,
ஆனைக்கோட்டை.

[59200]

திருமதி

## இரத்தினபூபதி துரைராசா

கோப்பாய் வடககைச் சேர்ந்த திருமதி இரத்தினபூபதி துரைராசா 14–09–98 நேற்றுக் காலமாகி விட்டார்.

இவர் துரைராசாவின் அன்பு மனைவியும், விஜயகுமார் (பிரான்ஸ்), திருமதி சறோஜினி வைரவதாசன், சிவகுமார் (பிரான்ஸ்), சுதர்சினிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், உமா (பிரான்ஸ்), வைரவதாசன் (நியூஸ்ரான்லிஸ்), சர்வேஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் கோபி சங்கர், சகானா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15–09–98) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
இ. துரைராசா
(கணவர்)

கம்பாவத்தை,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(59217)

திருமதி

## அன்னப்பிள்ளை சதாசிவம்

சாவகச்சேரி நுணாவில் மேற்கைச் சேர்ந்த திருமதி அன்னப்பிள்ளை சதாசிவம் நேற்று (14-09-98) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற காசிப்பிள்ளை சதாசிவம் (நுணாவில் கொல்லங்கிராய் வீரகத்திவிநாயகர் ஆலய தர்மகர்த்தாவும் சாவகச்சேரி பட்டின சபை முன்னாள் அங்கத்தவரும்) அவர்களின் அன்பு மனைவியும், பூவேந்திரனின் (மால்சிப் கம்பனி, கொழும்பு) பாசமிகு தாயாரும், திருமதி பத்மினியின் (ஆசிரியை, மட்டுவில், சரஸ்வதி வித்தியாலயம்) மாமியாரும், பொன்னம்பலம் (கனடா), கந்தையா (முன்னாள் உதவி அரசாங்க அதிபர்), தம்பிராசா செல்லம்மா (லண்டன்), ஜெயரட்ணம் இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், கஜேந்திரா, துளசி, ஜெயந்திரா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15-09-98) செவ்வாய்க்கிழமை கொழும்பு, ஜெயரட்ன மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகளின் பின்னர் பிற்பகல் 4-00 மணியளவில் கனத்தை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கந்தையா குடும்பத்தினர்.

கண்டி வீதி, சாவகச்சேரி.

(சி/4877)

## தேங்காய் திருட்டு

சுன்னாகம் தெற்குப் பகுதியில் இரவு வேளைகளில் மரங்களில் தேங்காய் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. (ஐ-27)


## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்
15 – 09 – 98 முதல்
எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா நடித்த
ஒளிவிளக்கு
( ரீல்ஸ் )
காட்சி: 10-30, 2-30
(59212)

## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.
ரஜனி, மீனா
நடித்த
முத்து
(கடைசி வாரம்)
18 ஆம் திகதி முதல்
அமைதிப்படை
10-30, 2-00, 5-00
(புதிய நேரம்)

## ராஜா 'B' திரை

யாழ்ப்பாணம்.
இன்று
சரத்குமார் (இருவேடம்)
விஜயகுமார் – குஷ்பு
மீனா, மனோரமா
கபாலி, கவுண்டமணி
நடித்த
நாட்டாமை
(சி/4778)

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.
இன்று முதல்
விஜய் - சிம்ரான்
நாகேஸ்,விவேக் நடித்த
நண்பர்கள்
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070-212228
(59037)


## வலி.மேற்கு பிரதேச சபை அனுதாபத் தீர்மானம்

யாழ்ப்பாணம், செப். 15

யாழ் மாநகர சபை குண்டு வெடிப்பில் பலியான மேயர் பொன். சிவபாலன், யாழ். நகரத் தளபதி பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ் உட்பட சகல இராணுவ பொலீஸ் அதிகாரிகளுக்கும் மாநகர சபை ஊழியர்களுக்கும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை அனுதாபம் தெரிவித்து தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது.

நேற்று இச்சபையின் தலைவர் ந. திரிலோகநாதன் தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்திலே இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

களுத்துறைச் சிறையில் வைத்து ஈ. பி. டி. பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா தாக்கப்பட்டமைக்கும், வெலிக்கடைச் சிறையில் கிருஷாந்தி கொலை வழக்கின் முதலாவது எதிரி சோமரத்ன ராஜபக்ஷ தாக்கப்பட்டமைக்கும் இச்சபை தனது கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கின்றது.

வலிகாமம் மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி, ஆபாச காட்சிகள் காண்பிக்கும் மினி சினிமாக்களையும் கல்லூரிகள், தனியார் கல்வி நிலையங்கள் ஆகியவற்றிற்கு அருகில் இயங்கும் மினி சினிமாக்களையும் தடை செய்ய வேண்டும்.

(ஐ-5-7)

# மரண அறிவித்தல்

## வள்ளியம்மை ஐயாத்துரை

பழைய சந்தை, திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட வள்ளியம்மை 14-09-98 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற ஐயாத்துரையின் (ஓய்வு பெற்ற லிகிதர், காட்டுக் கந்தோர்) மனைவியும், பத்மலீலாதேவி, பரமேஸ்வரி, சரஸ்வதி, தம்பி என்று செல்லமாக அழைக்கப்படும் மகேஸ்வரன் (ஊழியர், பொன்னையா வைத்தியசாலை, திருநெல்வேலி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், இ. கந்தசாமி (காப்பாளர் இ. போ. ச.), து. முத்துராஜா (பெயின்ரர்), இ. இராஜேஸ்வரன் (கமம்), ம. பவானி (இலவாலை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சிவக்கொழுந்து (பிரான்ஸ்), சிவபாக்கியம், நல்லம்மா (கனடா), காலஞ்சென்ற தம்பித்துரை (வவுனியா), தம்பிராஜா (கொக்குவில்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தம்பு(பிரான்ஸ்), காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை, தியாகராஜா (கனடா), பாக்கியம், சுந்தரகாந்தா (மல்லி) ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஜனனி (ஆசிரியை, திருநெல்வேலி றோ. க. பாடசாலை), வாசுகி, சிவதர்சினி, சுவிதா (மாணவிகள், யா/இ. ம. கல்லூரி), உமாநந்தினி (மாணவி, வேம்படி மகளிர் கல்லூரி), பகீரதன் (மாணவன், திருநெல்வேலி றோ. க. பாடசாலை) யதுர்ஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (15–09–98) இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஐ. மகேஸ்வரன்
(மகன்)

கேணியடி,
திருநெல்வேலி கிழக்கு.

(59218)

# கேள்வி அறிவித்தல்

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை

இதன் கீழ்க் குறிப்பிடப்படும் வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் பச்சிலைப்பள்ளி பிரதேசசபைச் செயலாளரால் கோரப்படுகிறது. 1998 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதி பி. ப. 2 மணிவரை கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விகளை அதற்கென வைக்கப்பட்ட பெட்டியில் இடவும் அல்லது பதிவுத் தபால் மூலம் சேர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விகள் 1998 – 10 – 02 ஆம் திகதி காலை 10 மணிக்கு கேள்விச் சபையால் திறக்கப்பட்டுப் பரிசீலனை செய்யப்படும். அச்சமயம் கேள்விக்காரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் சமுகம் கொடுக்கலாம்.

நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தின் தரம் 9 அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் கேள்விப் பத்திரம் பெற்றுக் கொள்வதற்குத் தகுதியுடையவராவார். கேள்விப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்பு இற்றைவரை செய்யப்பட்ட வேலை விவரங்கள் அடங்கிய பதிவுப் புத்தகத்தினை கேள்விக்காரர் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்களைப் பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபையில் 1998-09-15 முதல் 1998 09-25 பி. ப. 2 மணிவரை கீழ்க்குறிப்பிடப்படும் கேள்விப்பத்திரக் கட்டணத்தையும், கேள்விப் பிணைப் பணத்தையும் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விகளை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் உரிமை கேள்விச் சபைக்கு உண்டு. மேலதிக விவரங்களைப் பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபைப் பணிமனையில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் |
|---|---|---|
| பளை பஸ் நிலையம் முன்பாக சந்தைப் புறத்தில் கடைத் தொகுதி அமைத்தல் ( 1 ஆவது கட்டம் ) | ரூ. 500 | ரூ. 20,000 |

கு. ந. பாலச்சந்திரன்
செயலாளர்
தலைவருக்காக

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,
பளை. 15 - 09 - 1998

(சி/4879)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலும் 2 லட்சம் ஈரானிய படைகள் ஆப்கன் எல்லைப்பகுதியில் குவிப்பு!

தெஹ்ரான், செப். 15

மேலும் 2 லட்சம் படையினரை ஆப்கானிஸ்தானுடனான தனது எல்லைப் பகுதிக்கு அனுப்புவதாக ஈரானிய அரசு அறிவித்துள்ளது.

ஈரானில் எல்லைப்பகுதியைப் பாதுகாப்பதற்காகவே இம் முயற்சி மேற்கொள்ளப் படுவதாகவும் —

இம்மாத இறுதியில் ஆப்கானிஸ்தான் எல்லைப்பரப்பில் வேலியாக இப்படைகள் நிறுத்தப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

முன்எப்போதும் நடத்தப்படாத பெரும் எடுப்பிலான போர் ஒத்திகையில் ஈரானிய படைகள் ஈடுபடுத்தப்படும் என்றும் —

ஆப்கானிஸ்தானை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கும் தலிபான் அமைப்பினருக்கு எதிராகச் செயற்பட — தேவை ஏற்படின் எல்லையைத்தாண்டிச்செல்லவும் — தமது படையினர் தயாராக இருப்பர் என்றும் ஈரான் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் மஸார் ஷெரீப் நகரை தலிபான் கைப்பற்றிய போது பத்து ஈரானிய இராஜதந்திரிகள் காணாமற்போயினர். பின்னர் அவர்கள் கொல்லப்பட்டிருப்பதாக தற்போது தெரிவிக்கப்படுகிறது.

ஈரான் - தலிபான் உறவு மோசமடைய இதுவே காரணம். (இ-ரி)

## விமானவிபத்து தவிர்ப்பு

சுவிஸ், செப். 15

கலிபத் விமான நிலையத்தில் இருந்து ரங்பூர் நோக்கிப் புறப்பட்ட சுவிஸ் ''சார்ட்டட்'' விமானத்தில் ஏற்பட்ட புகை காரணமாக அந்த விமானம் புறப்பட்ட சில நிமிட நேரங்களில் பாதுகாப்பாக தரைஇறக்கப்பட்டது.

விமானத்தில் மொத்தமாக 149 பேர் பயணம் மேற்கொண்டிருந்தனர். (இ-ரி)

## சுனி முஸ்லிம் தலைவர் உட்பட நால்வர் பலி!

### பாகிஸ்தானில் சம்பவம்

இஸ்லாமாபாத் செப். 15

பாகிஸ்தானில் இனம் தெரியாதவரினால் நால்வர் சுடப்பட்டுள்ளனர்.

சுனிமுஸ்லிம் பிரிவுத்தலைவர் அல்லாமா சுவைப் நதிப், அவரது மெய்ப் பாதுகாவலர் உட்பட நால்வரே சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் ஆவர்.

பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக இஸ்லாமாபாத் விமான நிலையத்திற்குச் சென்று கொண்டிருந்த சமயம் வானில் வந்த அடையாளம் தெரியாதவரினால் இவர்கள் சுடப்பட்டனர்.

பாகிஸ்தானில் கடந்த ஒரு வருடமாக சுனி—ஷியா மதப் பிரச்சினை எதுவும் இடம்பெறவில்லை.

இச் சம்பவத்தினால் புதிதாகப் பிரச்சினை எழலாம் என அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (இ-ரி)

## யானைக்கு பிரசவ லீவு

புதுடில்லி, செப். 15

உத்தரப்பிரதேசத்திலுள்ள தட்பா தேசிய பூங்காவில் ரோந்துப் பணியில் ஈடுபட்டு வந்த பெண் யானை ஒன்றுக்கு உத்தாப்பிரதேச வனத்துறை அமைச்சர் பிரசவகால லீவு வழங்கி மிருகக்காட்சி சாலையின் மருத்துவசாலைக்கு அனுப்பி வைத்துள்ளார்.

'சம்பாகாளி' என்ற இந்த யானை நீண்டகாலமாக தட்பா தேசிய பூங்காவில் ரோந்துப் பணியில் ஈடுபட்டு வந்தது.

இந்த யானை இம் மாதம் குட்டி ஒன்றை பெற்றெடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த யானைக்கு இதுவே தலைப் பிரசவம் எனவும்—

எனவே இதற்கு ஓராண்டு பிரசவ விடுமுறை வழங்கப்படவேண்டும் எனவும்—

அமைச்சரிடம் தலைமை வனத்துறை காவலர் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

அதனையடுத்தே அமைச்சர் அந்த யானைக்கு பிரசவகால விடுமுறை வழங்கியதுடன் லக்னோவின் உள்ள மருத்துவ வசதிகளுடன் கூடிய மிருகக் காட்சிசாலைக்கு யானையை அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டார். (இ-9)

## நத்தன்யாகுவை பதவி துறக்குமாறு கோரிக்கை

டெல்அவிவ், செப். 15

இஸ்ரேலியப் பிரதமர் பென்ஜமின் நத்தன்யாகு பதவி விலக வேண்டும் என்று இஸ்ரேலியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மத்திய கிழக்கு அமைதி தொடர்பாக நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் முன்னாள் இஸ்ரேல் பிரதமர் யிட்ஸாட் ரபீனும் பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத்தும் சந்தித்து உடன்படிக்கை கைச்சாத்திட்டு 5 வருடங்கள் பூர்த்தியை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட பேரணியிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

டெல் அவில் நகரில் உள்ள ரபீன் சதுக்கத்தில் இந்த அமைதிப் பேரணி நடைபெற்றது.

''உடனடியாக அமைதி'' என்ற இயக்கத்தின் உறுப்பினர் இதனை ஏற்பாடு செய்தனர்.

அமைதிக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் நத்தன்யாகு பதவி விலக வேண்டும் என பேரணியில் கலந்து கொண்டோர் கோரிக்கை விடுத்தனர்.

பேரணியில் 40 ஆயிரம் இஸ்ரேலியர்கள் கலந்து கொண்டனர். (இ-ரி)

உலக அரங்கில்

## காங்கிரஸ் தேர்தலுக்கு தயாரில்லை; மாற்று அரசு அமைக்கவே விருப்பம்

புதுடில்லி செப். 15

மற்றொரு தேர்தலுக்கு காங்கிரஸ் தயாராக இல்லை.

இவ்வாறு காங்கிரஸ் தலைவர் பி. ஏ. சன்மா செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

தற்போதைய அரசு கவிழ்ந்து புதிய தேர்தல் நடத்துவதா? அல்லது புதிய அரசு நிறுவுவதா? என்ற நிலை உருவாகுமானால் மாற்று அரசு ஒன்றை நிறுவ காங்கிரஸ் கட்சி முன்வரும் என்றும் சன்மா கூறினார்.

காங்கிரஸ் கட்சியைக் கட்டி எழுப்புவதையும் தலைமையைப் பலப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு இயங்குகின்றோம் என்றும் சன்மா கூறினார்.

தற்போது பாரதிய ஜனதாக் கட்சியை கவிழ்ப்பது காங்கிரஸின் நோக்கமல்ல, தேர்தலைப் பொறுத்தவரை காங்கிரஸ் கூட்டுக்களைத் தவிர்த்து தனித்தே போட்டியிடும். சில சந்தர்ப்பங்களில் காங்கிரஸ் கூட்டுச் சேர்வது நாட்டுக்கு நன்மை பயக்கும் எனில் கூட்டு அரசை அமைக்கலாம் எனவும் சன்மா தெரிவித்தார். (இ-ரி)

## வாஜ்பாய்க்கும் அத்வானிக்கும் கறுப்புக்கொடி

சென்னை, செப். 15

அறிஞர் அண்ணாவின் 90 ஆவது பிறந்த தினத்தில் கலந்து கொள்ள இன்று சென்னை வரும் பிரதமர் வாஜ்பாய்க்கும் உள்துறை அமைச்சர் அத்வானிக்கும் கறுப்புக்கொடி காட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முழுநாஸ்திகரான அண்ணாவின் பிறந்தநாளுக்கு ஆஸ்திகரான பிரதமர் வருவதை எதிர்ப்பதாக இந்து மக்கள் கட்சியின் மாநில அமைப்பாளர் தெரிவித்துள்ளார்.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத்தினால் இன்று நடத்தப்படும் பிறந்தநாள் [illegible] மரும் அத்வானியும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-ரி)

பலாலி மத்தி

## சுவாமிநாதர் பூதப்பிள்ளை

அவர்கள்

## சிவபதம் அடைந்த 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 18 - 08 - 1918

மறைவு 16 - 08 - 1998

அன்புக்கோர் அணிகலனாய்
பாசத்திற்கோர் உறைவிடமாய்
ஆற்றலுக்கோர் உத்தமனாய்
பண்பிற்கோர் தெய்வமாய்

வாழ்ந்து எங்களையெல்லாம் வாழ வைத்த அன்பு அப்புவே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(சி/ 4874)

## வாழ்த்துகின்றேன்

அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம் பெற்று, பதவியை ஏற்றுக்கொண்ட கந்தரோடையைச் சேர்ந்த

திரு. அப்புத்துரை தற்பரானந்தன்,
திரு. செல்லத்துரை மகாதேவன்
திரு. சின்னையா கணேசவேல்

ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

க. திருநாவுக்கரசு
கிராம அலுவலர்,
கந்தரோடை (ஜே/200)

(சி/4875)

## கண்ணீர் அஞ்சலி

திருமதி

### அன்னப்பிள்ளை சதாசிவம்

(நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.)

எமது ஆலய தர்மகர்த்தாவும், பரிபாலன சபைத் தலைவருமாகிய

திரு. ச. பூவேந்திரன் அவர்களின் அன்புத் தாயார்

கொழும்பில் காலமாகியதை அறிந்து அதிர்ச்சியடைந்தோம். அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கொல்லங்கிராய் ஸ்ரீ வீரகத்தி விநாயகரின் அருள் சொரிய வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஆலய பரிபாலன சபை
கொல்லங்கிராய் ஸ்ரீ வீரகத்தி
விநாயகர் ஆலயம்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(சி-4876)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

லவ் பேட்ஸ்கூடு, நாய்க் கூடு, வீட்டுத்தளபாட வகைகள் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி பரராசசேகரன், பிறைற் இன்ஸ்ரிரியூட், 8 பிளர்ச்சஸ் ஒழுங்கை, சுண்டுக்குளி. [59117]

### தவறிவிட்டது

மோட்டார் சைக்கிளின் சிறிய கறுப்புமூடி தவறி விட்டது. தகவல் தெரிந்தோர் S.இராமலிங்கம், நாவலர்மடம், கரவெட்டி எனும் முகவரிக்கு அறிவிக்கவும். சன்மானம் வழங்கப்படும். [59191]

குருசோ வீதியை வசிப்பிடமாகக் கொண்ட அபிஷேகநாதன் அலெக்ஸ் சந்திரா என்பவரின் தேசிய அடையாள அட்டை (695492120V), விசேட அடையாள அட்டையும், கைப்பேர்ஸும் திருநெல்வேலி சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து ஷண் ரெக்கோடிங் ஸ்பொட்டில் ஒப்படைக்கவும். (59198)

இணுவில் மேற்கு கந்தசுவாமி கோவிலடியை வசிப்பிடமாக கொண்ட செல்லத்துரை தெய்வேந்திரன் என்பவரின் தேசிய அடையாள அட்டை கடந்த 10 - 09 - 98 வியாழக்கிழமை அன்று கொக்குவில் சந்திக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் S. தெய்வேந்திரன், 422, K. K S வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (59201)

### புறொயிலர் குஞ்சு

புறொயிலர் குஞ்சு உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு; மல்லிகாபதி, சந்தை முன் ஒழுங்கை, மானிப்பாய். (59192)

### தக்காளி நாற்று

மிறாயாஇன தக்காளி நாற்றுக்கள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: அறவழி போராட்டக் குழு, கைதடி, நுணாவில் சாவகச்சேரி. ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் பெறலாம். (59097)

### காணி விற்பனை

ஊரெழு எல்லை சுன்னாகத்தில் உள்ள முப்பத்தைந்து பரப்பு பனங்காணி விற்பனைக்குண்டு. தோட்டச் செய்கைக்கு உகந்த மண். தொடர்பு: செ.இராமநாதன், மயிலணி, சுன்னாகம். (59203)

### O / L Maths

Distinction பெறுபேறடைவதற்காக 33 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து 20 நாள்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் கற்பிக்கப்படும். க. ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (59196)

## பிரிவுபசாரவிழா

சுழிபுரம் பொது நூலகராகக் கடமையாற்றி நூலகராகப் பதவியுயர்வுபெற்று மல்லாகம் பிரதேச சபைக்கு மாற்றலாகிச் சென்ற பார்வதியகுமாரின் பிரிவுபசார விழா அண்மையில் நடைபெற்றது.

வலி.மேற்கு பிரதேச சபை உப அலுவலக மண்டபத்தில் கா.சந்திரராசா தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

## காற்றோடு கலந்தவர்க்கு கண்ணீரால் அஞ்சலிகள்

கண்டவைகள் எல்லாமே கனவாகிப் போகாதோ?
கண்முன்னே நடந்தவைகள் கனவல்ல. நிஜமேயாம்
கண்களிலே நீர்பெருக கவலையினால் உளம் நடுங்க
விண்ணகமே சென்று விட்ட எம்மவர்க்கு அஞ்சலிகள்

பிறப்பவர்கள் இறப்பதுவும் புதுமையல்ல நியதி அதே
இறப்பினையே எய்துவிட்ட எம்மவரே
உங்களை நாம்
மறப்பதுவும் சுலபமல்ல எப்போதும் நெஞ்சினிலே
நிறைவாக இருப்பீரே! நீண்டதுயில் கொள்வீரே!

பொன்னை ஒத்த சிவபாலன்
நகரபிதாஎனத் திகழ்ந்தோன்
தன்னையுமே அர்ப்பணித்த சேவைகளை
மறப்போமா?
கன்னல் கரும்பான கனிவான சொல்லுடையோன்
மின்னல் என மறைந்து விட்டான் மிக்க துயர்
நாம் அடைந்தோம்.

நிர்வாக சிறப்புடைய திரு. பத்மநாதன்
நிகரில்லா சேவை செய்த பொறியியலாளர்
ஈஸ்வரம்

தட்டெழுத்து கடமை செய்த திரு. பத்மராஜா
கட்டடத்து படக்கலைஞர்
திருமதி மல்லிகா இராசரெத்தினம்

நீண்டதுயில் கொண்டவரே சென்ற இடம்
எவ்விடமோ?
பூண்ட பணி உம்புகழை என்றென்றும் பறைசாற்றும்
ஆண்டவனின் திரு அடிகள் அடைந்தவரே
உங்களுக்கு
மீண்டும் எம் அஞ்சலிகள் கண்ணீரால்
நாம் தொழுதே.

சுகாதார வைத்திய அதிகாரியும்,
பணியாளர்களும்
யாழ். மாநகராட்சி மன்ற
சுகாதாரப் பிரிவு.

(59207)

## மட்டக்களப்பு மாநகர உப தலைவர் அஞ்சலி

யாழ்ப்பாணம், செப். 15

வலுவிழந்து, சோலையிழந்து, நலிந்த தோற்றமுடன் காட்சி தரும் யாழ். நகரின் புனரமைப்பை மையமாக வைத்து அந் நகரைப் புதுப் பொலிவூட்டும் நோக்குடன் யாழ். முதல்வராகப் பதவி ஏற்று இரு மாதங்கள்கூட ஆகாத நிலையில் காலனின் அரவணைப்புக்குள்ளான யாழ். முதல்வர் பொ. சிவபாலனின் அகால மறைவு எம்மைச் சோகத்துக்குள்ளாக்கியுள்ளது.

மட்டக்களப்பு மாநகர சபை உப தலைவர் பெ. தனபாலசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். மேயர் மறைவு குறித்து விடுத்துள்ள செய்தியில் அவர் இப்படித் தெரிவித்துள்ளார்.

துணிச்சல் மிகச் செயற்பாடுகள் நிமித்தம் சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் அவர் பெயர் பொறிக்கப்படும். அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனை செய்கின்றோம்— என்றும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

யா/ கோப்பாய்

## சரவணபவானந்த வித்தியாலய

பழைய மாணவர் சங்கம்

## ஒன்றுகூடல் நிகழ்ச்சி

மேற்படி நிகழ்ச்சி 20 - 09 - 98 ஞாயிறு முற்பகல் 10-30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற உள்ளது.

பிரதம விருந்தினர்: திரு க. மார்க்கண்டு
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

சிறப்பு விருந்தினர்:
திருமதி செல்வமலர் சிவஞானரத்தினம்
(பதவிநிலை உதவியாளர்,
பிரதேச செயலர் காரியாலயம், கோப்பாய்)

பழைய மாணவர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்று நடைபெறவுள்ள மதிய போசனத்தில் கலந்து கொள்ள விரும்பும் பழைய மாணவர்கள் ரூபா 100 ஐ சங்க பொருளாளர் அல்லது அதிபரிடம் செலுத்தி பெயர்களைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நா. சண்முகரத்தினம்
தலைவர்

பொ. விக்னேஸ்வரலிங்கம்
செயலாளர்

ச. குணசிங்கம்
பொருளாளர்

(59211)

## பெண் விற்பனையாளர்கள் தேவை

யாழ். நகரின் பிரபல வர்த்தக நிலையமொன்றிற்கு G. C E. (O/L) பரீட்சையில் சித்தியடைந்த பெண் விற்பனையாளர்கள் தேவைப்படுகின்றனர்.

யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: 19 - 09 - 98

இல. 786. மே/பா உதயன்,
யாழ்ப்பாணம்.

(சி-4872)

## சாவகச்சேரி நகரசபை

# கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் 01 - 10 - 98 ஆம் திகதி முற்பகல் 10-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதே தினம் 11-30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராம்) தரம் 'எம் 9' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திலும் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் மாத்திரம் கேள்விப் பத்திரம் கோருவதற்குத் தகுதியுடையவராவார்.

ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | கேள்விப்பத்திரக் கட்டணம் |
|---|---|---|
| 01. மரக்கறிக் கொட்டகை இல. 1 நிர்மாணம் | 5,000/- | 500/- |
| 02. மரக்கறிக் கொட்டகை இல. 11 நிர்மாணம் | 5,000/- | 500/- |
| 03. நவீன சந்தைத் திருத்தம் | 3,000/- | 500/- |
| 04. விளையாட்டு மைதான பார்வையாளர் கொட்டகை அமைத்தல் | 3,000/- | 500/- |

கேள்விப்பத்திரங்களை சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் 29 - 09 - 98 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை மேற்குறித்த கேள்வி வைப்புப் பணத்தையும், கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் செலுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மு. செ. சரவணபவ
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.

(சி/4873)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி (பொதுக்கலை)
ரூபினா சாந்தியின் தாயார்
திருமதி
**பேனாட் மேரி கிறேஸ்**
அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவிக்கின்றோம்.

கலைப்பீட 2ஆம் வருட 'A' பிரிவு
பிரதிநிதி, மாணவர்கள்.

(59206)

## கண்ணீர் அஞ்சலி

எமது நுண்கலைத்துறை இடைவரவு விரிவுரையாளராகக் கடமையாற்றிய
திருமதி
**மல்லிகாதேவி ராஜரட்ணம்**
(சட்டடவியலாளர்)

அவர்களின் அகால மரணச்செய்தி கேட்டு அதிர்ச்சியும், கவலையுமடைகிறோம். அன்னாரின் இழப்பு ஈடுசெய்யப்பட முடியாதது. அன்னாரின் இழப்பினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கலைவட்டம், நுண்கலைத்துறை
யாழ். பல்கலைக்கழகம்.

(59209)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுடன் பேசவேண்டும் என்ற கோரிக்கை தீர்வுக்கு வழிகோலும்

## பீரிஸ் கூறுகிறார்

கொழும்பு, செப். 15

விடுதலைப்புலிகள் அமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டும் என தற்போது யோசனைகள் முன்வைக்கப்படுகின்றன. இது தொடர்பாக பகிரங்க விவாதங்களும் நடக்கின்றன. சகல அரசியல் கட்சிகளும் இந்த யோசனைக்கு உடன்பாடு காண இந்த விவாதங்கள் வழிவகுக்கும்.

நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் மேற்கண்டவாறு கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் போது எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பைப் பெற அரசாங்கம் எப்போதும் தயாராக உள்ளது. சகல கட்சிகளின் ஒத்துழைப்புடன் தீர்வுத்திட்டத்தை தயாரிக்கவேண்டும் என்பதையும் அரசாங்கம் ஏற்றுள்ளது. ஆனால் எதிர்க்கட்சியினர் இந்த விடயத்தில் அக்கறை இல்லாமல் இருக்கிறார்கள் - என்றார்.

(இ-3-9-7)

# செம்பியன்பற்றுவரை தட்டிவான் சேவை

செம்பியன்பற்று, செப். 15

வடமராட்சி கிழக்குப் பகுதிக்கான தட்டிவான் சேவை பருத்தித்துறையிலிருந்து செம்பியன்பற்று வரை கடந்த 9 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகிறது.

நீண்ட காலமாக இப்பகுதி மக்கள் வாகன வசதியின்றி நாகர்கோயில் பகுதிக்குச் சென்றே பருத்தித்துறை, சாவகச்சேரி போன்ற இடங்களுக்குத் தமது போக்குவரத்தை மேற்கொண்டனர்.

புதிதாக நடைமுறைக்கு வந்துள்ள தட்டிவான் சேவையால் மாமுனை, செம்பியன்பற்று, குடாரப்பு ஆகிய பகுதி மக்கள் பெரும் பயனடைந்துள்ளனர்.

இதுவரை காலமும் நாகர்கோயிலிலிருந்து நடைபெற்று வந்த தட்டிவான் சேவை வழமைபோல் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-8-36)

# தொழில் முயற்சிப் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், செப். 15

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவன யாழ்ப்பாண புனர்வாழ்வுத் திட்டம், சிறிலங்கா ஜேர்மன் சேபே நிபுழ்ச்சித் திட்டம் ஆகியவற்றுடன் யாழ். பல்கலைக்கழகம் இணைந்து நடத்தும் தொழில் முயற்சியாண்மை பயிற்சி நெறி யாழ். பல்கலைக்கழக சிற்றி ஹோலில் ஆரம்பமானது.

தொடர்ந்து இரு வாரங்களுக்கு இப்பயிற்சி நெறி நடைபெறவுள்ளது

இப்பயிற்சி நெறியில் தொழில் முயற்சியாளர்கள் பலர் பங்குபற்றி தமது தொழில்துறைகளை விருத்தி செய்வதற்கான முகாமைத்துவத்தைப் பெறவுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக சேபே அலகு இணைப்பாளர் நித்தியாசண்முகம் தலைமையில் ஆரம்பமான இந்தப் பயிற்சி நெறியின் ஆரம்ப வைபவத்தில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன், ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் வதிவிடப் பிரதிநிதி புறுனோ, பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தற்போதைய தொழில் முயற்சியாளர்களையும், எதிர்கால தொழில் முயற்சியாளர்களையும் ஊக்குவித்து உறுதியான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி வேலை வாய்ப்பினை உருவாக்கும் நோக்குடனே இந்தப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பயிற்சித் திட்ட அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

இப் பயிற்சி நெறி இம் மாதம் 28 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (இ-5

# அத்திவாரக்கல் நடும் நிகழ்வு

வலி.வடக்கு, செப். 15

மல்லாகம் மகாவித்தியாலய இரண்டு மாடிக் கட்டடத்துக்கான அத்திவாரக் கல் நடும் நிகழ்வு அண்மையில் அதிபர் க. நாகேந்திரசிலன் தலைமையில் இடம் பெற்றது. யாழ். மாவட்ட ஈ. பி. டி. பி. அமைப்பாளர் க. ஜெகன் அத்திவாரக் கல்லை நட்டார்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியின் கீழ் 10 லட்சம் ரூபா தற்போது இக்கட்டடவேலைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

(இ-86)

# குடிசை தீக்கிரை

யாழ்ப்பாணம், செப். 15

சிறுபிள்ளைகளின் விளையாட்டு வினையாகி குடிசை வீடொன்று தீக்கிரையானது.

மானிப்பாய் கட்டுடைப் பகுதியில் கடந்த செவ்வாய் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அ. நாகராசா என்பவருடைய வீடே தீக்கிரையாகியது.

வீட்டில் பெரியவர்கள் இல்லாதவேளை சிறுவர்கள் குப்பி விளக்கைப் பற்றவைத்து விளையாடிய போதே தற்செயலாக தீ வீட்டில் பற்றி வீடு முற்றாக எரிந்து நாசமாகியது எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-15)

# கட்டடங்கள் புனரமைப்பு

மானிப்பாய், செப். 15

பண்ணாகம் வடக்கு அமெரிக்கன் மிஷன் த. க. பாடசாலையின் சேதமடைந்த கட்டடங்கள் யாவும் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

5 லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டு வரும் இப்பணியில் சங்கானைப் பிரதேசச் செயலரும், பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோரும் அதிக அக்கறையுடன் ஈடுபட்டு வருவதாக அதிபர் க. இரத்தினேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

(இ-90)

# இலவச அரிச்சுவடி ஏடு

கொழும்புத்துறை, செப். 15

எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நவராத்திரி தினத்தை முன்னிட்டு ஏடு தொடக்குவதற்கான இலவச அரிச்சுவடி ஏடுகள் மில்க்வைற் தொழிலகத்தினால் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

இதனைப் பெற விரும்பும் பாடசாலைகள், மற்றும் பொது நிறுவனங்கள் மில்க்வைற் தொழிலகத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-30)

# மருதங்கேணியில் மரம் வெட்டுவதை தடுப்பதற்குக் கண்காணிப்புக் குழு

## கிராம சேவகர் தலைமையில்

யாழ்ப்பாணம், செப் 15

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் அனுமதி இன்றி மரம் வெட்டி எடுத்துச் செல்பவர்களைக் கண்காணிக்க அப் பகுதி கிராம உத்தியோகத்தர்கள் தலைமையில் கண்காணிப்புக் குழு ஒன்று பிரதேச செயலர் வி. பீ. வேலாயுதபிள்ளையினால் அமைக்கப்பட்டுள்ளது.

இப் பிரிவிலுள்ள அம்பன், குடத்தனைப் பகுதிகளில் சில காலங்களுக்கு முன்னர் ஊற்று நிறுவனத்தின் அனுசரணையுடன் பரந்த அளவில் சவுக்கு மரங்கள் நடப்பட்டிருந்தன.

தற்பொழுது இம் மரங்கள் விஷமிகளால் வெட்டி எடுத்துச் செல்லப்படுவதை தடுக்கும் முகமாகவே இக்குழு அமைக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

மேலும் இப் பகுதியில் அனுமதிக்கப்பட்ட இடங்களைத் தவிர ஏனைய பகுதிகளில் மண் அள்ளுவதும் தடை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(இ-100)

# யாழ். மாவட்ட எம். பி. உண்ணாவிரதம்!

கொழும்பு, செப். 15

யாழ். மாவட்டத்துக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவு திட்டத்தில் இருந்து ஒதுக்கப்பட்ட நிதியில் தமது திட்டங்களுக்கு இடமளிக்கப்படவில்லை என்று தெரிவித்து, அந்த நடவடிக்கையைக் கண்டித்து யாழ். மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் இலியாஸ் நேற்று முன்தினம் புத்தளத்தில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களும் இந்தப் போராட்டத்தில் பங்குபற்றினார்கள்.

சுழற்சி முறையில் இந்தப் போராட்டம் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-3-21)

# செய்திக் கொத்து

### குளங்கள் புனரமைப்பு

தென்மராட்சி, செப். 15

கெயர் நிறுவனத்தினரால் பளை நகர கிராம அலுவலர் பிரிவில் உள்ள பரலவக்குளம், வெற்றிலைப் பள்ளம் ஆகிய குளங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

இக் குளங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு மழை நீர் தேங்கி வைக்கக் கூடியதாக உள்ளதால் இப் பகுதி விவசாயிகள் பெரிதும் நன்மையடைவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-11)

### ஊக்குவிப்பு அன்பளிப்பு

வலி. தெற்கு, செப். 15

சுன்னாகம் மக்கள்வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படும் மாணவர்மலர்ச்சி சேமிப்புத் திட்டத்தில் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையைச் சேர்ந்த மாணவர்களே அதிக அளவில் சேர்ந்துள்ளனர்.

ஆயிரம்ரூபா, பத்தாயிரம் ரூபாவுக்கு மேல் சமித்த பல மாணவர்களுக்கு பாடசாலை கல்வி உபகரணங்கள் அடங்கிய பார்சல்கள் வங்கியினால் ஊக்குவிப்பு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

(இ-152)

### பக்ஸ் இயந்திரம் கொள்வனவு

சுதுமலை, செப். 15

தபால் திணைக்கள யாழ். பிராந்தியக்கிளை கணக்கீட்டுக் காரியாலய பாவனைக்கென புதிய ''பக்ஸ்'' இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்துள்ளது.

(இ-15)

### முச்சக்கர வண்டிகள் அன்பளிப்பு

வலி.வடக்கு, செப். 15

வலி.வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலகத்தினால் கால் ஊனமுற்றவர்களுக்கு அண்மையில் முச்சக்கரவண்டிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்களுக்கே இந்த முச்சக்கர வண்டிகள் பிரதேசசெயலர் திருமதி ப. திலகநாயகம் போலினால் விநியோகிக்கப்பட்டுள்ளன.

(இ - 86)

### சைக்கிள் நிறுத்துமிடம் அமைப்பு

வடமராட்சி, செப் 15

வல்வெட்டித்துறை மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் 50 ஆயிரம் ரூபா செலவில் சைக்கிள் நிறுத்துமிடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. வைத்தியசாலை அபிவிருத்திச்சபை இதனைக் கட்டி முடித்துள்ளது.

(இ - 173)

### கசிப்பு உற்பத்தி கண்டு பிடிப்பு

வடமராட்சி, செப். 15

கசிப்பு உற்பத்தி விற்பனையில் ஈடுபட்ட மூவரைப் பருத்தித்துறை புளொட் அமைப்பினர் பிடித்துள்ளதோடு ஒரு பரல் கசிப்பையும், கசிப்பு உபகரணங்களையும் கைப்பற்றினர்.

பருத்தித்துறை தும்பளை தெற்கைச் சேர்ந்த மூன்று நபர்களே பிடிபட்டவர்கள் ஆவர். (இ-173)

### முகாமையாளருக்கு பதவிஉயர்வு

யாழ்ப்பாணம், செப். 15

இலங்கை மின்சாரசபையின் வடபிராந்திய பிரதிப் பொது முகாமையாளராக இதுவரை கடமையாற்றி வந்த வே. இராஜேந்திரனுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையின் (மனிதவள) மேலதிக பொதுமுகாமையாளராக இவருக்கு பதவி உயர்வுவங்கப்பட்டுள்ளது. இவரின் வடபிராந்திய வெற்றிடத்திற்கு புதியவர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளதாக இலங்கை மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-4)

### பாலர் பாடசாலை அமைப்பு

வலி. தெற்கு, செப். 15

புன்னாலைக்கட்டுவன் வடக்கு கப்பம் புலம் பாரதி சனசமூக நிலையத்தினரால் பாலர் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நிலையத்தலைவர் க. மெய்யழகன் தலைமையில் நடைபெற்ற பாலர் பாடசாலை ஆரம்பவிழாவில் வலிகாமம் தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் ஞா. தேவச்சந்திரனும் கலந்து கொண்டார்.

(ஐ-152)

### ஓவியப் போட்டியில் முதலிடம்

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்தினால் நடத்தப்பட்ட 'ஓசோன் படையைப் பாதுகாத்தல்' தொடர்பான ஓவியப்போட்டியில் கனிஷ்டபிரிவில் பருத்தித்துறை தம்பசிட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவன் செல்வன் தி. வீரசிங்கம் ரஞ்சித் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

(ஐ-173)

### தாய் சேய் நலன் பேணும் நிலையங்கள்

வடமராட்சி, செப். 15

வலலாய், இடைக்காடு, தம்பாலை ஆகிய இடங்களில் தாய் சேய் நலன் பேணும் நிலையங்கள் யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொன்றும் 85 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இந் நிலையங்களில் விரைவில் தாய் சேய் நலன் பேணும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

(இ-173)

### இயக்குநர் சபை தெரிவு

யாழ்ப்பாணம், செப். 15

காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கடந்த வாரம் நடைபெற்றவருடாந்தபொதுக் கூட்டத்தில் நடப்பு வருட இயக்குநர் சபைத் தெரிவு இடம்பெற்றது.

கூட்டுறவு உதவி ஆணையாளர் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் ஏழுபேர் கொண்ட இயக்குநர் சபை போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டது.

(ஐ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈசன் கல்வி நிலையம்

கே. கே. எஸ் வீதி, கோண்டாவில்.

எமது வழமையான ஆசிரியர் குழுவுடன் ஆரம்பமாகின்றது.

வணிக, கணித, உயிரியல் வகுப்புகள்

**A\L 99**
**DAY CLASS**

ஆரம்பம்: 16 – 09 – 98 (புதன்)
11. 00 a. m.

அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

(59193) – நிர்வாகி

## கண்ணீர் அஞ்சலி

எங்கள் ஆசிரியர்
திரு. க. அருந்தவராஜன் (கோபி)
அவர்களின் அன்புத் தந்தையார்


**நாகநாதர் கந்தையா**

அவர்களின் பூவுலகப் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பகல் நேர வகுப்பு மாணவர்கள்
[O/L D 3 பிரிவு]

(59199) விக்னா கல்வி நிறுவனம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 12 – 06 – 1926
விண்ணில் 15 – 09 – 1997

திருமதி
**சவிரிமுத்து மேரிதிரேசா**
(அரசம்மா)

ஓராண்டு சென்றதம்மா - எனினும்
தீரவில்லை எம்கவலை.
அன்புமுகம் பார்க்காமல் அன்புமொழி கேட்காமல்
ஆறாது ஆறாது அழுதாலும் தீராதம்மா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்!
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

46, புது வீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(59162)

## போஷாக்குத் திட்ட நடவடிக்கைகள்

வடமராட்சி, செப். 15
வடமராட்சி, தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் போஷாக்குத் திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் வயது வந்தோர்களுக்கான போஷாக்கு விரிவுரைகள் பாடசாலை சிறுவர்களுக்கான கருத்தரங்குகள் அரச சார்பற்ற நிறுவனங்களின் உறுப்பினர்களுக்கான கருத்தரங்குகள் கிராமிய போஷாக்கு ஆய்வுப்பட்டறை என்பன நடத்தப் படவுள்ளன.

இத்திட்ட நடவடிக்கைகளுக்கென சுமார் 15 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வடமராட்சி தென் மேற்கு பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது.

(இ 173)

## வீதி வழிகாட்டல் கற்கள்

வலி. வடக்கு, செப். 15
யாழ். மாவட்ட பிரதான வீதிகளில், வீதி வழி காட்டல் கற்கள் சிமெந்தினால் கட்டப்படுகின்றன.

கடந்த காலங்களில் இக்கற்கள் சேதமாக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் காணப்பட்டன.

தற்போது இக்கற்களை வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் காங்கேசன்துறை வீதி, பலாலி வீதி, சண்டி வீதி. பருத்தித்துறை வீதி, மானிப்பாய் வீதி ஆகிய இடங்களில் நிறுவி வருகின்றனர்.

(இ-86)

## ஓய்வூதிய வவுச்சருடன் வினாக்கொத்து

யாழ்ப்பாணம், செப். 15
கோப்பாய்ப் பிரதேச செயலகத்தினால் செப்ரெம்பர் மாதத்தில் விநியோகிக்கப்படும் ஓய்வூதிய வவுச்சர்களுடன் இரு வினாக்கொத்துப் படிவங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அவற்றை இம்மாத இறுதிக்குள் பூர்த்தி செய்து கோப்பாய்பிரதேச செயலகத்தில் ஒப்படைக்குமாறு கோப்பாய்ப் பிரதேச செயலர் கே. கேதீஸ்வரன் ஓய்வூதியர்களைக் கேட்டுள்ளார்.

(இ-8)

உ


மருதடி குருமுருகன் துணை! ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம!!

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான வெகுதானிய வருடம் ஆவணி மாதம் 31 ஆம் நாள் (16 - 09 - 1998) புதன்கிழமை பிற்பகல் 01 மணி 40 நிமிடம் முதல் 03 மணி 36 நிமிடம் வரையுள்ள தனுசு லக்கின சுபமுகூர்த்த வேளையில்,

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**சிவபாலன்**
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**பிறேமலதா**
அவர்களுக்கும்

மருதடி திருமுருகன் திருவருளால் திருமணம் நடத்தப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு திருமணம் பருத்தித்துறை மருதடி முருகன் ஆலயத்தில் நடைபெற உள்ளது.

அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இரு வீட்டார் அழைப்பு)

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்!

திரு. திருமதி
பொ. எங்கரசு
பவளம்மா
அல்வாய் தெற்கு, மாலிசந்தி.

திரு. திருமதி
[illegible]
(ஸ்ரீராம் நகை மாளிகை நெல்லியடி)
சு. பூமணி
புலோலி வடக்கு, பருத்தித்துறை.

(59066

## கண்ணீர் அஞ்சலி

திருமதி
**மல்லிகாதேவி இராஜரட்ணம்**
(கட்டடக் கலைஞர், மாநகரசபை)

அவர்களின் அகால மறைவை ஒட்டி துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்/பழைய மாணவர்கள்

Building Technological Institute
கட்டடத் தொழில் நுட்பவியல் நிறுவனம்

73, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்

(59205)

## கண்ணீர் அஞ்சலி

எமது ஆசிரியர்
திரு. க. அருந்தவராஜா (கோபி)
அவர்களின் பாசமிகு தந்தையார்

**திருவாளர் நா. கந்தையா**

அவர்களின் பூவுலகப் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

பகல் நேர வகுப்பு மாணவர்கள்
(பிரிவு D 4)

(59204) விக்னா கல்வி நிறுவனம்

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின் ஆசிரியரான
திரு. க. கோபி அவர்களின்
அன்புத் தந்தையாராகிய

**நா. கந்தையா**
அவர்கள்

13 – 09 – 98 இல் இறைவனடி சேர்ந்தார். அவரின் பிரிவுத் துயரால் துயருறும் அவரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகி,
ஆசிரியர்கள், மாணவர்கள்.
விக்னா கல்வி நிறுவனம்,
யாழ்ப்பாணம்.

(59202 )

## இருண்ட ஈராண்டு



**செல்வி ஞானந்தி கணநாதன்**

மலர்வு 09 – 08 – 77
உதிர்வு 07 – 09 – 96

(A/L உயிரியல் பிரிவு மாணவி, சுண்டுக்குழி மகளிர்கல்லூரி)

திதி: தசமி

"யாரை நொந்து யாது பயன்
எல்லாம் அவன் செயல்"

சாந்தி! சாந்தி! சாந்தி!

- குடும்பத்தினர்

348, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(59195)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

## உதயன்

### நாடகம் ஆரம்பம்!

தென்னிலங்கை அரசியல்வாதிகளின் நினைவெல்லாம் இப்போது தேர்தல்களைச் சுற்றியே சுழல்கின்றன. மாகாண சபைத் தேர்தல், அதனை அடுத்து ஜனாதிபதித் தேர்தல், தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தல் என்று மூன்றும் அடுத்துத் தொடுத்து வரவுள்ளன.

தெற்கில் அடுத்த வருடமே தேர்தலோடு தான் ஆரம்பிக்கப் போகிறது! மாகாண சபைத் தேர்தல் சட்டப்படி கடந்த மாதம் 28 ஆம் திகதி நடைபெற்றிருக்கவேண்டும் ஆனால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மாகாண சபைத்தேர்தல் முடிவுகள் அரசுக்குப் பாதகமாக அமையும் என்பதால் பின்னர் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலை அதுபாதிக்கும் என்பதால், தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது என்பதே சரியான காரணம்.

ஜனாதிபதியின் பதவிக் காலம் இப்போது முடிவடையாது. ஆனால் 20 மாதங்கள் முன்னராகவே தேர்தல் நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் இரண்டு வருடங்கள் கழித்து ஜனாதிபதித் தேர்தலை நடத்தினால் சந்திரிகா வெல்வது சந்தேகம். மோசமுற்று வரும் விலைவாசி உயர்வு, வேலை வாய்ப்பின்மை மற்றும் நீடிக்கும் போர் என்பன காரணமாக வாக்கு வங்கி அப்போது குறைந்து போகும் அதனால் வரும் மார்ச்சில் தேர்தலை நடத்துவதன் மூலம் ஜனாதிபதி பதவியைத்தக்க வைத்துக் கொள்ளலாம் என்று சந்திரிகா நம்புகிறார் அவரது இராசி பலனும் சாதகமாக உள்ளதாம்.

ஜனாதிபதித் தேர்தலில் வென்றால், இனப்பிரச்சினைக்கான தீர்வுப் பொதியை முன்னெடுப்பதற்கும் பொதுத்தேர்தலை நடத்தி பெரும்பான்மைப் பலத்தைப் பெற்று அதனை நிறைவேற்றுவதற்கும் வாய்ப்பு உண்டாகும் என்றும் ஜனாதிபதியும் அவரது சகாக்களும் நம்புகின்றனராம்,

இவ்வாறாகத் தெற்கில் தேர்தல் வாடை வீசத் தொடங்கி உள்ளதால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சி இப்போதுள்ள தடங்கல் நிலையைத் தாண்டமாட்டாது என்பது நிச்சயம்.

ஆனால், ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டுவதற்கு பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் தமிழ் மக்களின் வாக்குகள் தேவை. இதன் பொருட்டு மந்திரத்தால் மாங்காய் விழுத்தப் போவதாக இரண்டு தரப்புகளுமே பிரசாரம் செய்யும்.

அதன் ஆரம்பம் தான், நிபந்தனையுடன் பேசுவதற்குத்தயார் என்று ஜனாதிபதி விடுதலைப் புலிகளுக்கு விசேட தூதுவர் மூலம் கடிதம் அனுப்பினார் என்ற தகவலும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா விடுதலைப் புலிகள் பிரமுகர்களைச் சந்தித்துப் பேசினார் என்ற தகவலும் ஆகும்! தமிழர்களின் இரட்சகர்களாக இருதரப்புகளும் நாடகம் நடத்தத் தொடங்கி உள்ளன!

தமிழர்கள் என்ன செய்யப்போகிறார்கள்?

# மக்கள் எமக்குத் தந்த கடமையை நாங்கள் தொடர்ந்து செய்வோம்

## மேயரின் அஞ்சலி நிகழ்வில் ஆனந்தசங்கரி உரை

யாழ்ப்பாணம், செப். 15

''நாங்கள் இழக்க முடியாத ஒரு கலைப் பொக்கிஷத்தை இழந்திருக்கிறோம். மேயர் சிவபாலனின் இழப்பு ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும். சிவபாலன் சிந்திய இரத்தத்திலிருந்து பல சிவபாலன்கள் தோன்றுவார்கள். மக்கள் எமக்குத் தந்த கடமையை நாம் தொடர்ந்து செய்வோம்''.

இவ்வாறு யாழ். மாநகர சபை மேயர் பொன். சிவபாலனின் இறுதி அஞ்சலி நிகழ்வுக்குத் தலைமை வகித்து உரையாற்றிய தமிழர் விடுதலைக் கூட்டணி உபதலைவர் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

மேயரின் பூதவுடல் பொதுமக்களின் இறுதி அஞ்சலிக்காக யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள அவரது வாசஸ்தலத்தில் நேற்று வைக்கப்பட்டிருந்தது.

அஞ்சலி உரையில் ஆனந்தசங்கரி மேலும் கூறியதாவது:-

கவிதைத்துறையிலே, உரை நிகழ்த்துவதிலே. இலக்கியத் துறையிலே நிபுணத்துவம் மிக்க அறிவு படைத்தவர் சிவபாலன். அது மட்டுமன்றி ஆத்மீகத் துறையிலும் அதிக ஈடுபாடு கொண்டதுடன் இறை நம்பிக்கையும் உடையவர்.

யாழ். மாநகர மேயராக இருந்த திருமதி சறோஜினி யோகேஸ்வரன் படுகொலை செய்யப்பட்ட போது கட்சியினுடைய கௌரவத்தைக் காப்பாற்ற சிவபாலன் முன்வந்தார்.

சிவபாலன் யாழ். மாநகர மேயர் பதவியை ஏற்க முன்வந்த பொழுது அவரது மனைவியிடம் இது தொடர்பாக நான் கேட்டேன். ''எனது கணவனின் வழி தான் எனதுவழி. அவர் பதவி ஏற்பதில் எனக்குத் தடை இல்லை'' என்று அவரது மனைவி தெரிவித்தார்.

அதன் பின்னர் பதவி ஏற்றுக்கொண்ட அவர் யாழ். மாநகரசபை ஊடாக எத்தனையோ பணிகளை முன்னெடுப்பதற்கு திட்டமிட்டிருந்தார்.

### சிவபாலன் சந்தித்திருக்கக் கூடாது

இனப்பற்றும் கட்சிப்பற்றும் கொண்ட அவருக்கு இன்று வழங்கப்பட்ட பரிசு தான் இந்த மரணம். இந்தக் கொலையை ஏன்செய்தார்கள் எதற்காக செய்தார்கள் என்று தெரியாது. அமிர்தலிங்கம் இறப்பதற்கு சில நாள்களுக்கு முன்னர் சொன்னார் 'எங்களில் சிலருக்கு என்ன காத்திருக்கிறது என்பது தெரியும். அதனைச் சிலர் சந்திக்கத்தான் வேண்டும்' என்று.

அமிர், யோகேஸ்வரன் ஆகியோர் அதனைச் சந்தித்துவிட்டார்கள். நானும் சந்திக்க வேண்டியவனாக இருக்கின்றேன். ஆனால் தம்பி சிவபாலன் இதனைச் சந்தித்திருக்கக் கூடாது.

### உரிமையைப் பறிக்க உரிமை உண்டா?

சிவபாலன் தவறு செய்திருந்தால் அவரைச்சந்திக்கக் கூடிய பல இடங்கள் இருந்தன. அதற்காக ஏன் நான்கு அப்பாவி உத்தியோகத்தர்களையும் கொல்ல வேண்டும்? நீங்கள் எத்தனை பேரை அநாதையாக்கி விட்டிருக்கிறீர்கள். எத்தனை பெண்கள் விதவையாக்கப்பட்டிருக்கிறார்கள்.

விலைமதிக்க முடியாத எத்தனையோ உயிர்களைப் பறித்தெடுத்து விட்டீர்களே?

நீங்கள் யாழ்ப்பாணத்தில் இல்லை என்பதினால்தான் நாங்கள் வந்து செயற்பட்டோம். கஷ்ரப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களுக்கு உதவி செய்வதற்காகவே நாங்கள் யாழ். மண்ணுக்கு வந்தோம். எங்களுக்கு மக்கள் தந்த உரிமையைப் பறிப்பதற்கு உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது?

எங்களில் சிலர் பலியானால்தான் உங்களின் வெறி தீருமாக இருந்தால் நாங்கள் வரத் தயாராக இருக்கின்றோம். எவருடைய உயிர் உங்களுக்குத் தேவை என்று சொல்லுங்கள். நாங்கள் வரத் தயாராக இருக்கின்றோம்.

நாங்கள் நாடாளுமன்றத் தேர்தலில் பேட்டியிட இங்கு வரவில்லை. மக்களுக்குச் சேவை செய்யவே வந்தோம்.

நீங்கள் தொடர்ந்து இங்கு இருந்திருந்தால் நாங்கள் வந்திருக்க மாட்டோம். இன்று கூட நீங்கள் வந்தால் நாங்கள் இங்கிருந்து விட்டுப் போகத்தயார்,

போராட வேண்டிய இடத்தை விட்டு இங்கு வந்து இலையான்களை அடிப்பது போல சுட்டுக் கொல்கிறார்களே. இங்குள்ளவர்களுக்கு மரண தண்டனை விதிக்கும் பொறுப்பை யார் உங்களுக்குத் தந்தார்கள்?

இத்தகைய கொலைகள் தனி ஒருவரால் மட்டும் செய்திருக்க முடியாது. பலரும் இதற்கு உடந்தையாக இருந்திருப்பார்கள். பலரது ஒத்துழைப்புடன் தான் செய்யப்பட்டிருக்கிறது.

வடமராட்சி ராணுவ நடவடிக்கையின் போது குறிப்பிட்ட இயக்கம் தோல்வி யடைந்தபோது அமிர்தலிங்கம் தான் அவர்களைக் காப்பாற்றினார். அவர்களுக்குத் தேவையான நிதியுதவிகளை

(8 ஆம் பக்கம் பார்க்க)

# பலதுறைகளிலும் புரட்சி நடத்தி தமிழகத்தில் மறுமலர்ச்சி கண்டவர்

## அறிஞர் அண்ணா பிறந்த நாள் இன்று

''என் தோளுக்களித்த மலர் மாலையை தந்தை பெரியார் அவர்களின் தாளுக்களிக்கிறேன்'' என்று இலட்சிய விளக்கம் கூறிய சேர். ஏ. டி. பன்னீர்ச் செல்வம் அவர்களின் காலத்திற்குப் பின் தென்னகத்தில் சமுதாயப் புரட்சியை உண்டாக்கிய தத்துவ மேதை பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களுக்கு உறுதுணையாக காஞ்சியிலிருந்து ஒரு கரிபால்டி கிளம்பினார்.

'கல்கத்தா காய்ச்சல்' என்ற விடுதலைத் தலையங்கத்தின் மூலம் தென்னகம் எங்கும் பரபரப்பை உண்டாக்கி, அரண்மனையிலே தவங் கிடந்த நீதிக் கட்சியைப் பெரியார் அவர்களின் பாராட்டுதலுடன் ஆலமரத் தடிக்குக் கொண்டு வந்து, கட்சியிலுள்ள மிட்டாமிராசுகளுக்குச் சீட்டுக் கிழித்து, கட்சியைப் பாமர மக்களின், ஏழை எளியவரின் கூடாரமாக்கி, திராவிடர் கழகமாக்கி, பேச்சாலும், மூச்சாலும் பெரும் படையொன்றையே தயாரித்தார் அந்தத் தென்னாட்டு பெர்னார்ட்ஷா!

கழகத்தில் பூசா மனோபாவம் கூடாது என்ற கொள்கை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு பிளவு சக்திகள் சிதைந்துவிடாமல் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற கோட்டையைக் கட்டினார்.



எண்ணற்ற தோழர்களின் எலும்புகளைச் செங்கல்லாகவும், குருதியைச் சாந்தாகவும் உழைப்பைக் கோட்டையாகவும் உயர்த்திக் கட்டி, கறுப்பும், சிவப்பும் கலந்து அறியாமை அகலவும் உழைப்பே ஊதியமாகவும், இலட்சியமாகவும் கொண்ட கொடியினைப் பறக்கவிட்டு, ஞாலத்தின் ஆதி சக்தி உதய சூரியனை இலட்சினையாகவும் அதில் வைத்தார்.

எங்கு நோக்கினும் அந்த எளிய உருவந்தான். அந்த உருவந்தான் 15-09-1908 இல் காஞ்சியில் தோன்றிய கருவூலமான பேரறிஞர் அண்ணா அவர்கள். மக்கள் வாழ்விலே எழுச்சியை ஏற்படுத்தி, இன்பங் காண அவர் கொட்டிய முரசுதான் இன்பத் திராவிடத்தில் தமிழகத்தின் மறுமலர்ச்சியாகும்.

### பலதுறைப் புரட்சி

அண்ணாவின் புரட்சி, அரசியல் துறையில் மட்டுமல்ல, பொருளாதாரத் துறையில் மட்டுமல்ல, சமுதாயத் துறையில் மட்டுமல்ல, எந்தெந்தத்துறை நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கு, இன்பத்துக்கு நாசம் விளைவித்து வந்ததுவோ, அந்தந்தத் துறையிலே வேரூன்றி பலன்தரும் கருவாக வளர்ந்து கொண்டே இருந்தது.

பெரியார் வகுத்த பாதையே தமது கீதை எனக் கருதிப் பணியாற்றிய அண்ணா

அ. பொ. செல்லையா

அரசியல்வாதியாகப் பிரகாசித்திருந்தாலும் அவர் ஒரு சிறந்த எழுத்தாளர், சிறுகதைச் சிற்பி, நாடகவிற்பன்னர், அவ்வளவும் கற்பனைக் கருவூலகங்கள்.

பாட்டுடைத் தலைவனாக மன்னனும் மகேஸ்வரனும் இருந்து வந்த நிலையை மாற்றி மன்னார் சாமியையும் மருதையையும் கவிதைகளுக்கு இழுத்து வந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசனைப் போல சிறுகதைகள் என்றால் அதில நடமாடுபவர்கள் பெருங்குடி மக்கள்தான் என்ற நிலையை மாற்றித் தெருக்கூட்டும் தில்லையம்மாளையும் கைவண்டிக்காரக் கந்தனையும் சிறுகதைகளிலே உலவ விட்டார் அண்ணா. கோடீஸ்வரகோகிலங்களைப்பற்றி அவர் எழுதவில்லை. குமாஸ்தாவின் பெண்ணைப்பற்றி எழுதினார்.

சிறுகதையில் காதல் ஒரு சிறந்த அம்சமாக மிளிர்ந்த அந்தக் காலச் சிறுகதைப் பிரம்மாக்களின் கிருஷ்டியில் செல்வச் சீமான்களின் குடும்பச் சூழலிலே அல்லது அவதார புருஷர்களின் வாழ்க்கையிலே காதல் பிரகாசித்தது, ஏழை எளியவர்களின் வீட்டிலே காதல் காமத்தின் அம்சமாக காறி உமிழும் கடைச் சரக்காக இருந்தது. மாடு மேய்க்கும் மருதைக்கும், மூடை சுமக்கும் முத்தனுக்கும், ஆலைத் தொழிலாளி ஆறுமுகத்திற்கும் காதல் வருமென உணர்த்தினார் அண்ணா.

கடையில் வேலை பார்க்கும் கண்ணுச்சாமிக்கு முதலாளிச் செட்டியாரின் குமாரி கல்யாணிமேல் காதல் உண்டாகியது! அவன் காதலைக் கல்யாணி வேம்பெனவெறுக்கவில்லை, கற்கண்டைப் போல சுவைத்தாள்! இது 1938 — 40 இல் வசீகர வரலாற்றிலே அண்ணா காட்டும் படம்!

### பலவகைத்திறன்

அண்ணா பேசுகிறார் என்றால் கேள்விக்குறிகள் ஆச்சரியக் குறிகளாக மாறி வந்தது ஒரு காலத்தில்! புழுக்கமும் புகைச்சலும் இருந்தன. ஆனால், அவை மாறின. சரித்திரத்தைக் கண்டவர் அண்ணாவை மாஜினிக்குச் சமனாகக் அழகு பாக்கிறார்கள். இலக்கிய ரசிகர்கள் அண்ணாவை சேக்ஸ்பியரா–மில்ரனா– ரசலா எனத் தடுமாறுகிறார்கள். தமிழ் மொழியில் தணியாத ஆர்வமுள்ளவர் அண்ணாவைக் கானமேகமா கவிக்குயில் புகழேந்தியா என ஆச்சரியப்படுகிறார்கள். வான்மறை வள்ளுவரின் மறுபிறப்பு எனச் செப்புவாருமுண்டு. எங்கு பேசினாலும்,

(8 ஆம் பக்கம் பார்க்க)

### நாளை

ஆவணி - 31

புதன்கிழமை

திதி: ஏகாதசி முன்இரவு 08.22 வரை.

நட்சத்திரம்: பூசம் முழுவதும்

ஏகாதசி விரதம்

சுபநேரம்: 04.33 -06.03

ராகுகாலம்: 12.03 - 01.33

(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

### உதயவாக்கு

சரியாகச் செய்வது அவ்வளவு முக்கியமானதல்ல. சரியானதைச் செய்வதுதான் முக்கியமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறவிகள் இல்லாத காரணத்தால் இங்கு கிளை திறக்க முடியாதுள்ளது

## யாழ். வந்த ஆத்மகணாநந்தாஜி கருத்து

யாழ்ப்பாணம், செப். 15 "போதிய துறவிகள் இல்லாத காரணத்தால் யாழ்ப்பாணத்தில் இராமகிருஷ்ண மிஷன் கிளையைத் திறக்க முடியாதுள்ளது"

இவ்வாறு இராமகிருஷ்ண மிஷன் கொழும்புக் கிளை உப-தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகணாநந்தாஜி தெரிவித்தார்.

யாழ். வந்த அவர் உதயன் செய்தியாளரின் கேள்விக்கு பதில் அளிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் மிஷன் கிளையைத் திறக்க விரும்பினோம். போதிய துறவிகள் இல்லாததால் அதைச்செய்ய முடியாதுள்ளது. ஆனாலும் எமது அமைப்பின் பணிகள் இங்கு இயங்கும் அமைப்புக்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொடர்ந்தும் உதவிகள் வழங்கப்படும்.

யாழ்ப்பாணத்தில் பிரச்சினைகள் மூலம் மக்கள் பெரும் இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் போதும், அவர்களின் சமய உணர்வு இன்னமும் ஆழமாக இருப்பதைக்கண்டு சந்தோஷமடைந்தோம். மக்களிடம் காணப்படும் சமய உணர்வு எந்த இன்னல்கள் வந்தாலும் அவற்றைக் காப்பாற்றும்.

ஆச்சிரமங்களில் இருந்து துறவிகள் செயற்படுவதிலும் பார்க்க சேவை செய்ய வெளியே வரவேண்டும் என்று விவேகானந்தர் வேண்டுகோள் விடுத்தார். இந்தக் கோரிக்கையை அடுத்து துறவிகள் சேவைகளில் ஈடுபட்டனர்.

வைத்தியசாலை நடத்தி சத்திரசிகிச்சை செய்து நோயாளர்களைக் காப்பாற்றும் அளவிற்கு துறவிகள் இன்று சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

விஞ்ஞான வளர்ச்சிக்கு ஏற்ப பரந்த சிந்தனை சமயத்தில் ஏற்பட வேண்டும். பழைமை வாதம் பேசிக் கொண்டிருக்காமல் நவீன வளர்ச்சிக்கு ஏற்ப சமயத்திலும் புரட்சி ஏற்பட வேண்டும். இப்படி அவர் கூறினார்.

(இ-3-7)

## மக்கள் எமக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்)

யோகேஸ்வரன் வழங்கினார். ஆனால் அவர்களுக் கெல்லாம் கொடுத்த பரிசு துப்பாக்கிச் சூடு. இவ்வாறான கொலைகளினால் அவர்கள் எம்மை மட்டுமல்ல தங்களையும் அழிக்கிறார்கள்.

—இப்படி அவர் கூறினார்.

மாவை சேனாதிராஜா தனது அஞ்சலி உரையில் கூறியதாவது:-

*சகோதரப் படுகொலை நிறுத்தப்பட வேண்டும்*

முப்பது ஆண்டுகளுக்கு முன்னரே விடுதலைப் போராட்டத்திற்குத்தன்னை அர்ப்பணிக்கத் தயாரானவர் தம்பி சிவபாலன். தந்தை செல்வாவினுடைய வழியிலே கட்சிக்கொள்கையை மக்கள் மத்தியிலே எடுத்துச் செல்வதற்குத் துணையாக நின்றவர். அதுமட்டுமன்றி இன்று போராடும் சக்திகளுக்கும் ஆதரவாகச் செயற்பட்டவர்.

எங்களுடைய தலைவர்கள் அத்தனை பேரையும் இழந்து விட்டோம். உட்பகை எங்களை அழித்துக் கொண்டிருக்கிறது. இதனால் பலரை அழித்து விட்டோம். இந்த வரிசையில் இன்று தம்பி சிவபாலனையும் பறிகொடுத்து விட்டோம்.

உட்பகை இருக்கும் வரையும் எமது விடுதலை தடைப்பட்டுக் கொண்டுதானிருக்கும். சகோதரப்படுகொலைகள் நிறுத்தப்படவேண்டும். இந்தப் படுகொலைகள் எதிரிக்குச் சாதகமான நிலைமையைத் தோற்றுவிக்கும் என்பதால் இதனை நிறுத்துமாறு கோருகின்றோம.

அரசும் — விடுதலைப்புலிகளும் போரை நிறுத்த வேண்டும். அரசியல் தீர்வுக்கான பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும். மக்கள் எல்லோரும் திரண்டு போரை நிறுத்துவதற்குப் பாடுபட வேண்டும். இன்று நாங்கள் விடும் கண்ணீர் இந்தப் பழிகளைத் துடைக்க வேண்டும். பழி செய்தவர்களைத் திருத்த வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

யாழ். மாநகரசபை பிரதி முதல்வர் ந. ரவிராஜ் உரையாற்றும் போது —

சிவபாலன் இரக்க சுபாவம் கொண்டவர், திருக்குறள், தேவாரம். திருவாசகம் எல்லாம் அவருக்கு அத்துப்படி. எவருடைய மனதையும் புண்படுத்தாதவர் அவர். எல்லோரையும் அன்புடன் நேசித்த அவருக்கு இந்த முடிவைக் கொடுத்து விட்டோம். அதற்காக வருந்துகிறேன் — என்றார். மாநகர சபை உறுப்பினர் எஸ் எஸ். கனேந்திரன் பேசுகையில்— இந்தக் குண்டு தனிப்பட்ட சிவபாலனுக்கு வைக்கப்பட்ட குண்டு அல்ல, இது ஜனநாயகத்திற்கு வைக்கப்பட்ட குண்டு. தமிழ் மக்களுக்கு விடுக்கப்பட்ட சாவுமணி, ஒவ்வொரு தமிழனும் இதற்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும் என்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வன்னி மாவட்ட அமைப்பாளர் எஸ். சுதாகரன் தனது உரையில் இத்தகைய படுகொலைகள் மூலம் ஒரு போதும் எமது விடுதலையை வென்றெடுக்க முடியாது. விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்த நாம் இன்று எம்மை நாமே அழித்துக் கொண்டிருப்பது சரியா? என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும்.

அநியாயமான இவ்வாறான படுகொலைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் —என்றார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். பிரதிநிதி த. சுபத்திரன் உரையாற்றும் போது—மேயர் சிவபாலனுடைய கொலை ஜனநாயகத்துக்கு விடப்பட்ட சவாலாகும். இத்தகைய படுகொலைகள் கடந்த 15 வருடங்களாக நடைபெற்று வருகின்றன. இத்தகைய கொலைகளுக்கு எதிராக ஜனநாயக மனித உரிமைச் சக்திகள் எல்லாம் ஒன்று சேர வேண்டும் — என்றார்.

ஈ.பி.டி.பி. உறுப்பினர் வி. கே. ஜெகன் தனது உரையில் —சகோதர படுகொலையினால் எத்தனையோ அரிய உயிர்களை இழந்து விட்டோம். இத்தகைய கொலைகள் நிகழா வண்ணம் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். நாகசார சக்திகளுக்கு எவரும் துணைபோகக் கூடாது — என்றார்.

புளொட் பிரதிநிதி செ. கிருபைராசா பேசுகையில்— கடந்த 12 ஆம் திகதி நடைபெறவிருந்த மாநகரசபைக் கூட்டத்தை இலக்கு வைத்தே இக்குண்டு வைக்கப்பட்டது. ஆனால் கூட்டம் நடைபெறவில்லை. அதனால் 21 உறுப்பினர்களினது உயிரையும் காத்து தன் இன்னுயிரை தியாகம் செய்து விட்டார் மேயர் சிவபாலன் என்றார்.

தமிழர் விடுதலை கூட்டணி யாழ். மாவட்ட அமைப்பாளர் பொன். மதிமுகராசா உரையாற்றும் போது — மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக உழைக்க வந்தவர்களுக்கு வழங்கப்படும் தண்டனை மரணமா? இந்தக் கொலையை ஏன் செய்தீர்கள், எதற்காக செய்தீர்கள் என்பதை தெரிவியுங்கள்.

சகோதரப் படுகொலைகளை நிறுத்துமாறு இந்தக் கொலையைச் செய்தவர்களைக் கேட்கின்றோம். இனிமேல் இவ்வாறான கொலைகளை செய்யாது பார்த்துக் கொள்ளுமாறு செய்கிறவர்களைக் கேட்கின்றோம் — என்றார்.

மாநகரசபை உறுப்பினர் செ. கந்தையன், ஹென்றி ஆசீர்வாதம், கே. எம். எஸ். ஹமீத், எ. என். பாலகிருஷ்ணன் யாழ். மாநகரசபை கணக்காளர் [illegible] சிதராஜன் ஆகியோரும் அஞ்சலியுரை நிகழ்த்தினார்கள்.

(இ-5-7)

## இலவச மருத்துவ பரிசோதனை

நல்லூர் லயன்ஸ்கழக மாதாந்த செயல்திட்டத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நீராவியடி சனசமூக நிலையத்தில் இலவச மருத்துவப் பரிசோதனை முகாம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது,

இப்பரிசோதனை முகாமில் கண் பரிசோதனை, நீரிழிவு, வாய்ப்புற்றுநோய், பற் பரிசோதனை ஆகியவற்றுடன் முழுமையான மருத்துவப் பரிசோதனையும் வைத்தியர்கள் மற்றும் மருத்துவக் கல்லூரி மாணவர்களின் உதவியுடன் ஜி. பிரதீப்குமார் தலைமையில் நடைபெறவுள்ளன.

பரிசோதனைக்கு உட்படுத்தப்படுபவர்களின் எண்ணிக்கை 250 ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இப்பகுதி மக்கள் லயன் எல். ஓங்காரமூர்த்தியுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற் கொள்ளுமாறு நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவர் பா. தவபாலன் கேட்டுள்ளார்.

(இ-8)

## வெள்ளி விழா

தம்புருவளை சித்திவிநாயகர் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ வ. வே. தியாகராசாக் குருக்கள் தம்பதிகளின் சேவையைப் பாராட்டி மேற்படி ஆலய அன்பர்கள் எடுக்கும் வெள்ளி விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மேற்படி ஆலய மண்டபத்தில் சீ. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வாழ்த்துரைகள், சிறப்புரைகள், கலை நிகழ்ச்சிகள் என்பன இடம் பெறவுள்ளன.

(இ-8)

## வீட்டுத் தோட்டச் செய்கை

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 55 குடும்பங்களுக்கு வீட்டுத் தோட்டச் செய்கைக்கான பொருள்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

## விடுமுறை வழங்க முடிவு

சுன்னாகம் வர்த்தக சங்க எல்லைக்குள் உள்ள வர்த்தக நிலையங்கள் யாவும் பிரதி சனிக்கிழமைகளில் பிற்பகலும், ஞாயிற்றுக்கிழமைகளில் முழு நாளும் ஊழியர்களுக்கு விடுமுறை வழங்க வேண்டும்.

இவ்வாறு அண்மையில் நடைபெற்ற [illegible] வர்த்தகசங்கக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

(இ-110)

# 'மாக்பெட்' கட்டடத்தை பெற சமாசம் முயற்சி

## அமைச்சர் மட்டத்தில் பேச்சு

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் பிரதான வீதியில் உள்ள 'மாக்பெட்' கட்டடத்தைப் பெறுவதற்காக அமைச்சர் மட்டத்தில் பேச்சுக்கள் நடத்தி வருவதாக அந்தச் சமாசத்தின் தலைவர் சி. வி. கே. சிவஞானம் தெரிவித்தார்.

1971 ஆம் ஆண்டு இடம் பெற்ற கூட்டுறவுச் சங்கங்களின் புனரமைப்பின் போது, வட பகுதி விவசாய உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் சொத்துக்கள் அங்கத்தவர்களின் சம்மதமின்றி மாக்பெட் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டன.

மாக்பெட் நிறுவனத்தின் சேவைகளில் ஏற்பட்ட தொய்வு, திருப்தியின்மை, செயற்படாமை காரணமாக 1982 இல் யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப் படுத்தல் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் உருவாக்கப்பட்டது.

கடந்த 10 வருடங்களாக இச் சமாசமே யாழ். பிரதான வீதியில் உள்ள கட்டடத்தைப் பயன்படுத்தி வருகிறது.

இந்தக் கட்டடத்தைத் தமக்குச் சொந்தமாக்கித் தருமாறு சமாசம் கோரி வருகின்றது.

ஆனால் இக் கோரிக்கையை மாக்பெட் நிறுவனம் மறுத்து வருகிறது.

இந்த விடயந் தொடர்பாக சமாசம் கூட்டுறவு அமைச்சர், கூட்டுறவு அமைச்சின் செயலாளர், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்குக் கடிதம் எழுதியுள்ளது.

இக் கட்டடத்தில் இருந்தும், ஆதனத்தில் இருந்தும் வெளியேறவோ, வேறெவரையும் குடியேறவோ அனுமதிக்க முடியாது என்பது சமாசத்தின் நிலைப்பாடாகும்—

இப்படி அவர் மேலுந்தெரிவித்தார்.

## பருத்தித்துறையில் "ஹண்டி" கப்பல்

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவுச் சங்கத்துக்கு ஒரு தொகுதி பொருள்களுடன் ஹண்டி கப்பல் பருத்தித்துறை துறைமுகத்துக்குவந்து சேர்ந்தது.

இக்கப்பலில் தனியாருக்கும் ஒரு தொகுதி பொருள்கள் எடுத்து வரப்பட்டுள்ளன. பொருள்கள் இறக்கும் பணி உடனடியாக ஆரம்பிக்கப்பட்டது.

[இ-173]

## கிரிந்த கப்பலில் புகையிலை வெங்காயம்

புகையிலை, வெங்காயம் பனை உற்பத்திப்பொருள்கள் கிரிந்தகப்பலில் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

பருத்தித்துறையில் பொருள்களை இறக்கி முடித்த இக் கப்பலில் தனியார் வர்த்தகர்களினால் இப்பொருள்கள் ஏற்றிச் செல்லப்பட்டன.

# கைதானவர் பிணையில்

கடற்படையினரை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட ஒருவர் ஆயிரம் ரூபா சரீரப்பிணையில் விடுவிக்கப்பட்டார்.

வேலணை சாட்டியைச் சேர்ந்த த. குணபாலசிங்கம் என்ற குடும்பஸ்தரே பிணையில் விடுவிக்கப்பட்டவர் ஆவார்.

கடற்படையினரைப் பற்றி அவதூறாகப் பேசிய போது கடற்படையினரால் இவர் கைது செய்யப்பட்டு பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

சில நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இவர் மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போதே பதில் நீதிவான் திருமதி சு. இளங்கோவன் மேற்படி தீர்ப்பை வழங்கினார்.

(இ-ரி)

## பலதுறைகளிலும்...

(ஏழாம் பக்கத் தொடர்)

எந்தத் தலைப்பில் பேசினாலும் கொள்கைதான் அண்ணாவின் பேச்சுக்களிலே முக்கியத்துவம் வகிக்கும்,

அண்ணாவிடம் காணக் கிடந்த அரியபண்பு — தனிப் பண்பு—அழுக்காறு கொண்டவர்களைக் குறிப்பால்அறிந்த மாத்திரத்திலே அவர்கள் நிழலைக்கூட மதிக்காமல் நெடுந்தொலைவு விலகிச் சென்றுவிடுவார். ஆனால், சிக்கலின் ஆணிவேரைக் களைந்தெறியவும் தயங்க மாட்டார்.

அண்ணாவிடம் காணப்பட்ட அற்புதமான தலையாய சிறப்பியல்பு என்னவென்றால் அவர் எந்தப் பொறுப்பையும் இலகுவில் ஏற்றுக்கொள்ள மாட்டார். ஆனால், பொறுப்பை ஒப்புக்கொண்ட பின் அந்தப் பணியினின்று சிறிதும் பின்வாங்க மாட்டார். ஒப்புக்கொண்ட காரியத்தை வெற்றிகரமாக முடிக்கும் வரை ஓயவும் மாட்டார்.

*அரசியல் ஞானி*

தாழ்ந்த தமிழகத்தின் சீரழிந்த சமுதாயமாக ஒதுக்கப்பட்டிருந்த திராவிட சமுதாயத்தினைச் சூழ்ந்து நிற்கும் கேடுகளைக் களைவதற்கு அவர் சாதி சமயச் சழக்கர்களோடு வாளெடுத்துப் போரிடவில்லை; இரத்தக்களரி ஏற்படுத்திட வில்லை.; கத்தியைத் தீட்டவில்லை; திராவிட மக்களின் புத்தியைத் தீட்டினார்; புரிந்து கொண்டார்கள் மக்கள் ஆரியமாயை அகன்றது. ஆரியத்தின் காப்பாளர்கள் எனத் தங்களைத் தாங்கள் தலைவர்களாக்கியவர்கள் அண்ணாவின் வழியில் தடைக்கல்லாக இல்லாது நீங்கினர்.

வேட்டு முறையைவிட ஒட்டுமுறை சிறந்தது எனக் கருதினார். அரசியல் நீரோட்டத்தில் நீந்தலானார். அப்பொழுது தான் மக்களுக்குப் பணி செய்வது சுலபமாக இருக்கும் என உணர்ந்தார். பொருளியல் அறிஞராகப் பட்டம் பெற்ற அண்ணா, அரசியல் ஞானியாக மாறினார். 1957 இல் சட்டசபைத் தேர்தலில் புகுந்த திராவிட முன்னேற்றக்கழகம் எதிர்க்கட்சி வரிசையில் 15 பேருடன் இருந்து 1967 இல் ஆட்சியைக் கைப்பற்றியது. அண்ணா முதலமைச்சரானார்.

அவரது ஓராண்டுக் கால ஆட்சியில் மதுவிலக்கு, கலப்புத் திருமணம், பிச்சை எடுத்தலைத் தடுத்தல், பெண்ணுக்குச் சமத்துவம் மற்றும் சீதனக் கொடுமையை, சாதி அரக்கனை ஒழித்தல் போன்ற சட்டங்களால் நாடு இன்புற, தமிழ் நாடு என்ற பெயரினைச் சென்னை மாநிலத்திற்குச் சூட்டி மகிழ்ந்து தமிழர் இன்புற வாழ்ந்து 3-2-1969 இல் இவ்வுலகை நீங்கி, தமிழர் இதயங்களில் நீங்காத நினைவாகி விட்டார்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

வலிகாமம் தெற்கு, செப். 15

மருதனார்மடம் யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தில் கடந்த ஆண்டுகளில் பயிற்சி பெற்று வெளியேறியவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மேற்படி நிறுவன மண்டபத்தில் நடைபெற உள்ளது.

விவசாய நிறுவனத்தினால் வெளியிடப்படும் 'விவசாய நோக்கு' சஞ்சிகையும் அன்றைய தினம் வெளியிடப்படும்.

யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தின் அதிபர் த. குகதாசன் தலைமையில் நடைபெற உள்ள இந்த நிகழ்ச்சிகளில் அதி. வண. பேராயர் கலாநிதி சு. ஜெபநேசனும் திருமதி விமலா ஜெபநேசனும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்கின்றனர்.

விவசாய நோக்கு நூலின் அறிமுகவுரையை யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் த. சிவலோகநாதனும், நூல் மதிப்பீட்டுரையை ஓய்வுபெற்ற உதவி விவசாய பணிப்பாளர் வேதநாயகம் சில்வாவும் நிகழ்த்துவர்.

பயிற்சி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களை திருமதி விமலா ஜெபநேசன் வழங்குவார். (ஐ-152)

# மாடியால் வீழ்ந்து மரணமானதாகக் கூறப்பட்ட மகனின் சடலத்தின் விரல்களில் குண்டூசி குத்தப்பட்ட காயங்கள்!

## தந்தை சாட்சியம்

யாழ்ப்பாணம், செப். 15

படையினரால் கடந்த 9 ஆம் திகதி கைது செய்யப்பட்ட எனது மகனை கடந்த 12 ஆம் திகதி யாழ். ஆஸ்பத்திரியில் சடலமாகக் கண்டேன். சடலத்தைக் கூர்ந்து கவனித்தபோது அவரது கைவிரல்களில் குண்டூசி ஏற்றப்பட்ட காயங்கள் காணப்பட்டன. எனவே இது தொடர்பாக விசாரணை நடத்தி அவரது மரணத்துக்கு யார் காரணம் என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

இராணுவத்தினரால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் மாடி வீட்டில் இருந்து வீழ்ந்து மரணமானதாகக் கூறப்படும் யாழ்ப்பாணம் மவுண்கார்மல் வீதியைச் சேர்ந்த ஞானசிங்கம் அன்ரன் குணசேகரம் (வயது 26) என்பவரின் மரண விசாரணையில் சாட்சியமளித்த அவரது தந்தையார் ஞா. ஞானமுத்து மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். நீதிமன்றத்தில் மேலதிக நீதிவான் மு. திருநாவுக்கரசு முன்னிலையில் நேற்று இந்த மரண விசாரணை நடைபெற்றது. இறந்தவரின் தந்தையார் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

எனது மகன் யாழ் நகரிலுள்ள சன் றெககோடிங் பாரில் வேலை செய்பவர். கடந்த புதன் மு.ப. 10.30 மணியளவில் மேற்படி றெக்கோடிங் பாருக்கு இலக்கத் தகடு இல்லாத வாகனத்தில் இராணுவ சீருடையில் சென்ற மூவர் விசாரணைக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி அவரைக் கைது செய்தனர். அன்று மு.ப. 11.30 மணியளவில் அவர்கள் எமது வீட்டிற்கு மகனையும் கூட்டிக் கொண்டு வந்தனர்.

அவர்கள் வந்த வாகனத்தின் உள்ளே எனது கண்ணின் முன்னாலேயே மகனை கீழே அமர்த்தி வைத்திருந்ததனால் மகனுடன் கதைக்க முடியாமல் போய்விட்டது. அந்த வாகனத்தில் இருந்து இறங்கிய படையினர் எமது வீட்டில் தேடுதல் நடத்தினர். வீட்டில் எதுவும் கண்டெடுக்கப்படவில்லை. பின்னர் மகனையும் தம்முடன் கொண்டு சென்றனர். இதனை நானும் எனது மனைவியும், மகனது மனைவியும் [மருமகள்] நேரில் கண்டோம்.

என்னுடைய மகனை எங்கு கொண்டு செல்கிறீர்கள் என்று வீட்டிற்கு வந்த படையினரிடம் கேட்டேன். 'சிறிய விசாரணை ஒன்று இருக்கிறது முடித்து விட்டுக் கொண்டு வந்து விடுகிறோம்' என்று அவர்கள் கூறிவிட்டுச் சென்றனர்.

அன்று பகல் 2.30 மணிக்கு வேறு வாகனம் ஒன்றில் சீருடை அணிந்த சிலர் வந்து மருமகளை விசாரித்தனர். பின்னர் என்னைப்பார்த்து உன்னுடைய மகன் எட்டு வருடங்களாக விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருப்பதாகத் தெரிவித்தனர். நான் அதனை முற்றாகமறுத்தேன். பின்னர் மருமகளின் அடையாள அட்டையையும் பறித்தெடுத்துச் சென்றனர்.

12 ஆம் திகதி சனிக்கிழமை காலை வீட்டிற்கு வந்த பொலீஸார் விசாரணை என்று கூறி எனது மனைவியையும், மருமகளையும் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச்சென்றனர். நானும் அங்கு போனேன். உன்னுடைய மகன் மாடியிலிருந்து வீழ்ந்து இறந்து விட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் எந்த இடத்தில் எப்போது நடந்தது? சடலத்தை யார் இங்கு ஒப்படைத்தனர்? என்பதை அவர்களிடம் கேட்டேன். அதற்கு பதிலொன்றும் கூறப்படவில்லை. நான் அறிந்த வரையில் மேஜர் அன்றூ என்பவர் மகனின் சடலத்தை ஆஸ்பத்திரியில் ஒப்படைத்ததாகத் தெரியவந்தது.

மரண விசாரணை அதிகாரியின் முன் சடலத்தை அடையாளம் காட்டினேன். என்னுடைய மகன் ஒருபோதும் புலிகள் இயக்கத்தில் இருக்கவில்லை. எவரோ தவறான தகவலைக் கொடுத்துவிட்டார்கள் என்று கூறினேன்— எனத் தெரிவித்தார்.

வைத்திய பரிசோதனை அறிக்கை சமர்ப்பிக்கப்படாமையினால் தீர்ப்பு வழங்குவதை நீதிவான் ஒத்திவைத்தார். [ஐ-5-7]

## சமய சந்நிதியில்

துன்னாலை தெற்கு குடவத்தை விநாயகர் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஐ 8-15-173)

★ ★ ★

மாதகல் பாணாவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை நடைபெறும். கடந்த யுத்தகால அனர்த்தங்களின்போது பலத்த சேதமடைந்த இந்த ஆலயம் பல இலட்ச ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. (இ-135)

★ ★ ★

யாழ்ப்பாணம் அஞ்சணந்தாழ்வு புனித ஆரோக்கிய அன்னையின் வருடாந்த திருவிழா நாளை புதன்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை திருப்பலியுடன் நிறைவு பெறவுள்ளது.

★ ★ ★

கொழும்புத்துறை மணவியம்பதி அருள்மிகு ஸ்ரீ அம்பன் ஐயனார் ஆலய அலங்கார உற்சவ பூர்த்தியை முன்னிட்டு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு சங்காபிஷேகமும், விசேட பூசை வழிபாடுகளும், நண்பகல் அன்னதானம் வழங்கலும் இடம்பெறவுள்ளன.

மாலை 5.30 மணிக்கு சுவாமி வீதி வலம் வரும் காட்சியும் இடம்பெறும்.


கபிரியேல்

றெட் ஒயின்மன்ற்

[ சிவப்பு நெய் ]

எக்சிமா முதல் சகல புண்களுக்கும்

எட்வேட் சுதேச மருத்துவ நிலையம்

24 பஸ் நிலையம்,

யாழ்ப்பாணம்.

(59216)


## உணவு முத்திரைகள் அடுத்த வாரம் வரும்

யாழ். மாவட்டத்துக்குத் தேவையான உணவு முத்திரைகள் அடுத்த வாரம் விமானம் மூலம் எடுத்து வரப்படவுள்ளன.

இந்த முத்திரைகள் யாழ். செயலகத்திற்கு கிடைக்கப்பெற்றதும் உடனடியாக, பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு கடந்த இரு மாதங்களாக நிவாரணம் வெட்டப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டு இம்மாத இறுதியில் இவர்களுக்குரிய நிவாரணம் வழங்கப்படும் என்று யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-5-7)

## பாம்பு தீண்டியது

நெல்லியடி, செப். 15

கடையில் பொருள்களை வாங்கச் சென்றவர் கடை வாயிலில் வைத்து பாம்பினால் கடியுண்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை வடமராட்சி தும்பளையில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த இராசையா சுரேஷ் (வயது 17) என்பவரே இடது காலில் பாம்பினால் கடியுண்டு மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-109)

## நினைவஞ்சலி கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 15

தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்க முன்னோடி அமைப்பாளர் அமரர் அருளம்பலம் விசுவநாதன், மற்றும் அமரர் சின்னப்பு அல்பிரட் ஆகியோரது நினைவஞ்சலிக் கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பனை அபிவிருத்திச் சபையின் யாழ். தலைமைப் பணிமனையில் ஐயா சச்சிதானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பனை அபிவிருத்திச் சபை பொது முகாமையாளர் எஸ். கோகுலதாசன் உட்பட பலர் அஞ்சலி உரை நிகழ்த்துவர். (ஐ-8)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்வி நிறுவன ஆசிரியர்

திரு. க. கோபி அவர்களின்

தந்தையார்

**நாகநாதர் கந்தையா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

நிர்வாகி, ஆசிரியர்கள், மாணவர்கள்,

எலைற் கல்வி நிறுவனம்.

192, கச்சேரி - நல்லூர் வீதி,

யாழ்ப்பாணம். (592 4)

## இடம்மாற்றம்

சாவகச்சேரி

மகளிர் கல்லூரிக்கு அருகில்

இயங்கி வந்த

**ஞானம் சைக்கிள் வேக்ஸ்**

16-09-98 முதல்

துர்க்கை அம்மன் வீதியில் இயங்கும்

என்பதை வாடிக்கையாளர்களுக்கு

அறியத்தருகின்றேன்.

கா. ஞானச்சந்திரன்.

(சி/4880)

## கண்ணீர் அஞ்சலி

11-09-98 இல் அகால மரணமடைந்த

யாழ். மாநகர சபை உத்தியோகத்தர்களான

**திரு. சு. பத்மநாதன்,**

(பதில் ஆணையாளரும், நிர்வாக உத்தியோகத்தரும்)

**திரு. மா. ஈஸ்வரம்,**

(மராமத்துப் பொறியியலாளர்)

**திரு. பொ. பத்மராஜா,**

(ஆங்கிலத் தட்டெழுத்தாளர்)

திருமதி

**மல்லிகா இராஜரட்ணம்**

(கட்டடக் கலைஞர்)

ஆகியோருக்கு

காலச் சிறந்த பணியாற்றி... யாழ். நகரை

ஞாலத்தில் செழிப்புற ஏற்றி வைத்த

நால்வராம் பத்ம, ஈஸ்வர ரத்தினங்களே!

காலத்தால் அழியாத நினைவுடனே—கண்ணீரைப்

பொழிகின்றோம் உம்மடியில் காணிக்கையாய்!!

உத்தியோகத்தர்கள்,

சாவகச்சேரி நகர சபை,

சாவகச்சேரி பிரதேச சபை,

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை.

(சி/4878)

# JAFFNA COLLEGE

## VADDUKODDAI

## ADMISSION - 1999

1. ஆண்டு 1, ஆண்டு 6 வகுப்புகளுக்கு ஏனைய வகுப்புகளில் மட்டுப்படுத்தப்பட்ட வெற்றிடங்கள் உண்டு.
2. விண்ணப்பப்படிவங்களை ரூபா 100 செலுத்திக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
3. விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதிநாள் **15-10-98.**
4. ஆண்டு ஒன்றுக்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தின் பிரதி (போட்டோ ஸ்ரற் பிரதி) இணைக்கப்பட வேண்டும்.
5. விண்ணப்பப்படிவங்களைக் கிழமை நாள்களில் காலை 9.00 மணி தொடக்கம் 2.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
6. ஆண்டு ஒன்றுக்கு நேர்முகப் பரீட்சையும் ஏனைய வகுப்புகளுக்கு பிரவேசப் பரீட்சையும் நடைபெறும். திகதி பின்னர் அறிவிக்கப்படும்.
7. வயதெல்லை

ஆண்டு 1 : விண்ணப்பதாரி 01-02-93க்கும் 31-01-94க்கும் இடையில் பிறந்திருக்க வேண்டும்.

ஆண்டு 6 : விண்ணப்பதாரி 01-02-88 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.

– அதிபர்

யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.

(சி/4882)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசேட சலுகை

**oce**
**Photo Copying Paper**

ஹொலந்து நாட்டுத் தயாரிப்பான
"ஓசே" போட்டோ பிரதி பேப்பர்
A 4 -- 80 g/m
கொம்பியூட்டர் பிரிண்டருக்கும் பயன்படுத்தலாம்.
15 09-1998 — 24-09-1998 விசேட சலுகை
1 றீம் விலை: ரூ. 200/- மட்டுமே!

**சற்குணலிங்கன் படப்பிடிப்பாளர்**
புதிய இலக்கம் 139.
4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(சி/4883)



IIS
Jaffna, Sri Lanka
INSTITUTE OF INFORMATICS STUDIES

## POSTS VACANT

1. Branch Co-ordinator,
2. Part Time Lecturer in Computer Science

We require a Branch Co-ordinator and a Part Time Lecturer in Computer Science for our branch to be opened shortly at CHAVAKACHCHERI.

**Branch Co-ordinator:**

Eligibility: A person aged above 40 yrs. with at least 5 yrs experience in administrative capacity, fluency in English and fair knowledge of Sinhala.

**Part Time Lecturer:**

Eligibility: The ideal Candidate should passess a degree in Computer Science from a recognized University or Equivalent and have competency in MS OFFICE.

Salary negotiable. Apply before 20-09-1998.

Managing Director,
Institute of Informatics Studies,
68, Clock Tower Road,
Jaffna

(C/4881)



## மோட்டார் சைக்கிள்

வாங்க விருப்புபவர்களுக்கு
**ஓர் அரிய சந்தர்ப்பம்!**

உங்கள் விருப்பத்திற்கு ஏற்றபடி
தெரிவு செய்யக் கூடிய வகையில் வகை வகையான
தரமான கண்கவரும் மோட்டார் சைக்கிள்கள்
தற்சமயம் விற்பனைக்காக உள்ளன.
விஷேட கழிவுடன் பெற்றுக்கொள்ள

**இன்றே வாரீர்!**

◀▶ M D 90 - 50 கொண்டா
◀▶ V 90 - 50 யமகா
◀▶ C 90 - 50 சுப்பர்கப்
◀▶ C D 90 - 50 கொண்டா
◀▶ கஷ்ரம் 90 - 50 லான்சர்
◀▶ சாலி - 50

**ஸ்ரீ முத்துமாரி அம்மன் ரேடர்ஸ்**
171, K. K. S. வீதி,
யாழ்நகர்.
Tel: 2332

(59185)



## கண்ணீர் அஞ்சலி

எமது கல்வி நிலையத்தின் "வரலாறும் சமூகக் கல்வியும்" கற்பிக்கின்ற ஆசிரியரான
க. கோபி அவர்களின் பாசமிகு தந்தையார்

**நாகநாதர் கந்தையா**

அவர்களின் மறைவையொட்டி, அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நிர்வாகி, ஆசிரியர்கள் மாணவர்கள்,
யாழ். கல்வி நிலையம்,
ஆனைக்கோட்டை.

(59208)


### புதிய மேயர்…

(முதலாம் பக்கத் தொடர்)

கின்றது.

இத்தகைய கொலை அச்சுறுத்தலுக்கு அஞ்சி, ஒதுங்குவதானால், அது கூட்டணியை அரசியலில் இருந்து நிரந்தரமாகவே ஒதுக்கி விடும் என்று கூட்டணியின் துடிப்புள்ள இளம் வட்டாரங்கள் கருதுகின்றன. கூட்டணி உப தலைவர் வீ. ஆனந்தசங்கரி போன்றவர்களும் இதே கருத்தை பகிரங்கமாகத் தெரிவித்து வருகின்றனர்.

தற்போதைய உதவி மேயர் என். ரவிராஜும் தமக்கு மேயர் பதவி வழங்கப்பட்டால் அதை ஏற்கப் பின்னிற்பதாக சமிக்ஞை எதையும் வெளிப்படுத்தவில்லை என்றும் —

மேயர் பதவியை ஏற்குமாறு கட்சியால் வற்புறுத்தப்பட்டால் அவர் அதனை ஏற்றுக் கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் —

அவருக்கு நெருங்கியவர்கள் தெரிவித்தனர்.

கூட்டணியின் யாழ். அலுவலகத்துடன் சேர்ந்து இயங்கும் கூட்டணி ஆதரவாளர்களும் கொலை அச்சுறுத்தலுக்குப் பயப்படாமல் புதிய மேயர் ஒருவர் பதவி ஏற்க வேண்டும் என்பதையே விரும்புவதாகத் தெரிகின்றது.

என்றாலும் —

கூட்டணியின் தலைமைப் பீடத்தில் யாழ். மேயர் பதவிக்கு புதியவர் ஒருவர் நியமிக்கப்படுவது குறித்து இரண்டு விதக் கருத்து நிலவுவதாக அறியவந்தது.

மேயர் பதவிக்கு ஒருவரைத் தொடர்ந்து நியமிப்பது வெறும் உயிரிழப்பைத் தவிர வேறு எதையும் பெற்றுத் தராது என்றும்—

அவ்வாறு நியமிக்க முயல்வது தொடர்ந்து சவால் விடுவது போன்றதாகவே அமையும் என்றும்--

தற்போதைய களநிலைமையில் இது முரணான விளைவுகளைத் தரும் என்றும்—

கூட்டணியின் சில உயர் மட்டத் தலைவர்கள் கருதுகின்றனர்.

பொன். சிவபாலனின் படுகொலையால் விசனமுற்றிருக்கும் கூட்டணி எம்பிக்களான ஜோசப் பரராஜசிங்கம், நீலன் திருச்செல்வம் ஆகியோரும் இப்படிக் கருதுவதாகத் தெரிகின்றது.

கூட்டணியின் தலைவர் எம். சிவசிதம்பரமும், செயலாளர் நாயகம் ஆர். சம்பந்தரும் வெளிநாடு சென்றிருக்கின்றார்கள். அவர்கள் நாடு திரும்பிய பின்னரே மேயர் நியமனம் குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் தெரிகின்றது. அதுவரை மேயர் நியமனம் தாமதமாகும்.

சிகிச்சைக்காக இந்தியா சென்றிருக்கும் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரத்துக்கு அதிர்ச்சி ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக மேயர் சிவபாலனின் படுகொலைச் செய்தியை உடனடியாக அவருக்குத் தெரிவிப்பதில்லை என்று தீர்மானிக்கப்பட்டதாகவும்—

ஆனால் உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கப் பிரமுகர் இரா. ஜனார்த்தனன், மேயர் சிவபாலனின் கொலைச் சம்பவத் தகவலை சிவசிதம்பரத்துக்கு உடனடியாகத் தெரியப்படுத்தி விட்டதாகவும்—

சென்னைத் தகவல்கள் தெரிவித்தன. (உ)

### அம்பாறை…

(முதலாம் பக்கத் தொடர்)

பகிவாளருக்கு இந்த அநாமதேயத் தொலைபேசி மிரட்டல் விடுக்கப்பட்டது.

இராணுவத்தினரும் பொலீஸாரும் உடனடியாக அங்கு விரைந்து கட்டடத்தைச் சோதனையிட்டனர். ஆனால் குண்டு எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. நீதிமன்றத்தில் நேற்று நடைபெறவிருந்த வழக்குகள் இதனால் ஒத்திவைக்கப்பட்டன. (ஐ-21)



குண்டு வெடிப்பில் பலியான யாழ். நகரத் தளபதி மேஜர் ஜெனரல் சுஸந்த மெண்டிஸின் உடல் கண்டியில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்தபோது எடுக்கப்பட்ட படம். அவரது மனைவியும் இரு பிள்ளைகளும் அருகில் உள்ளனர். அவரது இறுதிச் சடங்குகள் நேற்றுப் பிற்பகல் கண்டியில் நடைபெற்றன.

## வன்செயல்கள் நீடிப்பு
# இரத்தினபுரியில் நேற்று தமிழர் ஒருவர் கொலை!

இரத்தினபுரி மாவட்டத்தில் தோட்டப் பகுதிகளில் ஏற்பட்ட வன்செயல்கள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன.

நேற்று இறக்குவானைப் பகுதியில் மலையகத் தமிழர் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் —

அதனையடுத்து அங்கு மேலும் பதற்றம் அதிகரித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை —

இரத்தினபுரி மாவட்டத்தில் தோட்டப் பகுதிகளில் பரவிய வன்செயல்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக ஒவ்வொன்றும் ஏழு பொலீஸார்களைக் கொண்ட 5 பொலீஸ் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வன்செயல்களால் பாதிக்கப்பட்டோரின் முறைப்பாடுகளை இக்குழுவினர் விசாரணை செய்வர் என்று இரத்தினபுரி மாவட்ட உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் தேவசிறி மாலிப்பொட தெரிவித்தார். (ஐ-9)

### புதிய…

(முதலாம் பக்கத் தொடர்)

கே. விக்னேஸ்வரன்.

அக்கரைப்பற்று, கல்முனை, வவுனியா பகுதிகளில் வலயக் கல்விப் பணிப்பாளர்களைத் தெரிவு செய்வதில் தொடர்ந்து இழுபறி நிலை நிலவுவதாகவும்—

புதிய வலயப் பிரிப்பை நடைமுறைப்படுத்துவது குறித்து இறுதிக்கட்டத் தீர்மானங்களை எடுப்பதற்காக எதிர்வரும் 22 ஆம் திகதி மாகாணக் கல்வி அமைச்சின் உயர்மட்டக் கூட்டம் ஒன்று நடைபெறவிருப்பதாகவும்— தெரியவந்தது. (உ-9)

## கண் பரிசோதனை

மானிப்பாய் பரிஸ் லயன்ஸ் கழகம் இம்மாதம் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று நவாலி வடக்கு அட்டகிரி சைவ வித்தியாலயத்தில் நடத்திய மாணவர்களுக்கான இலவச பற்பரிசோதனை முகாமில் 52 மாணவர்களுக்கு பற்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. (ஐ-135)

## யாழ். மேயரின்..

(முதலாம் பக்கத் தொடர்)

தெரிவித்தனர்.

பொதுமக்களின் அஞ்சலியைத் தொடர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணி உப தலைவர் வீ. ஆனந்தசங்கரி தலைமையில் அங்கு அஞ்சலியுரைகள் இடம்பெற்றன. கட்சிகளின் பிரமுகர்கள் உட்பட பலர் அஞ்சலியுரை நிகழ்த்தினர்.

அஞ்சலியுரைகளைத் தொடர்ந்து நண்பகல் 12 30 மணியளவில் மேயரின் பூதவுடல் கோம்பயன்மணல் மயானம் நோக்கி ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

வாகனங்கள் ஒலிபெருக்கிகள் மூலம் சோக இசைகளை ஒலிபரப்பியவாறு முன்செல்ல — சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையின் அணிவகுப்புடன் பான்ட் வாத்தியக்குழுவினர் பின்னால் செல்ல— தொடர்ந்து மலர் வளையங்களைத் தாங்கிய பெண்கள் சென்று கொண்டிருக்க — அதற்குப் பின்னால் பூதவுடல் தாங்கிய வாகனம் சென்றது.

மயானத்தில் இறுதிக் கிரியைகளின் பின்னர் பிற்பகல் 2-00 மணிக்கு மேயரின் பூதவுடலுக்கு அவரது சகோதரர்கள் தீ மூட்டினர்.

மேயர் சிவபாலனின் மறைவுக்கு அஞ்சலி தெரிவித்து நேற்று யாழ். நகரிலுள்ள சகல வர்த்தக நிறுவனங்களும் மூடப் பட்டிருந்தன. நகர வீதிகளில் தோரணங்களும், கறுப்புக் கொடிகளும் கட்டப்பட்டிருந்தன. வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன. நகர் எங்கும் பாதுகாப்புத் தீவிரப்படுத்தப்பட்டிருந்தது. சில பாதைகள் ஊடான போக்குவரத்தும் தடை செய்யப்பட்டிருந்தது. (உ-5-7-15-139-173)

## குடும்பத்தவர்களுக்கு…

(முதலாம் பக்கத் தொடர்)

ஊடாக ஜனாதிபதி தமது அனுதாபச்செய்திகளை அனுப்பியுள்ளார்.

ஜனாதிபதியின் அனுதாபச் செய்தி அடங்கிய கடிதங்களை மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல தமது விசேட பிரதிநிதி மூலம் சம்பந்தப்பட்ட குடும்பத்தவர்களிடம் நேற்றுக் கையளித்தார். (ஐ)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15-09-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org